ISSN 1391-9504

Vijey විජය්

# விஜய்

02.02.2011 - மலர் 07, இதழ் 48

## முத்திரையில் பதிக்கப்படும் பண்டைய மரபுரிமைகள்



## 'தீமில்' கொண்ட 'டைனோஸரஸ்'





## இலங்கையின் சுதந்திர தினம்

விலை
ரூபா 15/-

தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ஸ்ரீ விஜய மன்னனின் முடிவு

கொழும்பு சென்ற பிரதிநிதிகள் மீண்டும் திரும்பி வருவதற்கு முன்னரே ஸ்ரீ விஜய மன்னன் திடீரென மரணமடைந்து விட்டார். 1747 ஒகஸ்ட் மாதம் 11 ஆம் திகதியே இச் சம்பவம் நிகழ்ந்தது. இக்கால கட்டத்தில் ஒல்லாந்தில் இருந்து வந்த பிரதிநிதி ஒருவர் கண்ணொருவையில் தங்கியிருந்தார். அவர் விஜய மன்னனின் திருமணத்துக்கு வாழ்த்துத் தெரிவிக்கவே வந்திருந்தார். எனினும், அதனை அவரால் நிறைவேற்ற முடியவில்லை. எது எப்படி இருந்த பொழுதிலும் ஸ்ரீ விஜய மன்னன் 8 வருடங்கள்வரை ஆட்சி செய்தார். தனது ஆட்சிக்காலம் முழுவதும் ஒல்லாந்தருக்கு சார்பாக நடந்துகொள்ளவில்லை. அவர்களைக் கடுமையாக எதிர்த்தார். இவரின் மறைவின் பின் கண்டியின் அடுத்த மன்னனாக கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் முடிசூட்டப்பட்டான். இவர் ஸ்ரீ விஜய இராஜசிங்கனின் மைத்துனராவார். ஸ்ரீ விஜயஇராஜசிங்க மன்னனின் மனைவியின் சகோதரராவார். அவர் தனது 14 ஆவது வயதில் இலங்கைக்கு வந்தார். தனது சகோதரியை ஸ்ரீ விஜயஇராஜசிங்க மன்னனுக்குத் திருமணம் முடித்து வைக்க அவளுடனேயே இலங்கைக்கு வந்திருந்தார்.

எனினும் இவரது அரசாட்சியின்போது, குறிப்பிடத்தக்க செயல்களைச் செய்வதற்கு ஆரம்பகாலத்தில் மன்னனுக்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. அரச அதிகாரங்கள் அனைத்தையும் திசாதிபதிகள் தம்மிடமே வைத்திருந்தனர். அத்துடன் ஒருவருக்கொருவர் பொறாமையுடன் செயற்பட்டனர். அதிகமான பொறுப்புக்கள் தும்பறை மற்றும் மன்னம்பிட்டி நிலமேக்களுக்கே வழங்கப்பட்டிருந்தன. அவர்கள் இருவரும் பிரதான நிலமேக்களாகவும், சிங்களப் பிரிவின் தலைவர்களாகவும் இருந்தனர். அவர்களின் நடவடிக்கைகளின்படி, கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கனின் ஆட்சிக்காலத்தில் பல முக்கிய அபிவிருத்திகள் செய்யப்பட்டன. அப்பொழுது சிங்கள அரச வம்சத்திற்குரிய சிங்காசனம் அந்நியர் கையில் இருப்பது குறித்துப் பெரும் எதிர்ப்புகள் கிளம்பின. இவை அனைத்திற்கும் இடையில் சமய மற்றும் சாஸ்திர சம்பிரதாயங்கள் குறித்தும் எழுச்சிகள் ஏற்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேல் மாகாணப் பாடசாலை மாணவர்கள்



# அறநெறி வகுப்புகளுக்கு சமூகமளிப்பது அவசியம்

## மே.மா.சபை முதலமைச்சர் தெரிவிப்பு

மேல் மாகாணத்தின் சகல பாடசாலை மாணவர்களுக்கும் கட்டாயமாக அறநெறிப் பாடசாலைக் கல்வியைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் வேலைத்திட்டமொன்று செயற்படுத்தப்பட்டுள்ளதாக மேல் மாகாண சபை முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

அதன்படி, முதலாம் தரத்திலிருந்து 9 ஆம் தரம் வரையான வகுப்புகளில் கல்வி கற்கும் மாணவர்களை அறநெறிப் பாடசாலைகளுக்குச் செல்வதற்கு ஊக்குவிக்குமாறும் அது தொடர்பான பதிவேட்டுத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் அதிபர்களுக்கு சுற்றறிக்கை ஒன்றினூடாக அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

பாடசாலையில் ஒவ்வொரு வகுப்பாசிரியரும் தமது வகுப்பு மாணவர்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் அறநெறிப் பாடசாலைக்குச் செல்வது குறித்து பதிவேடொன்றை வைத்திருக்க வேண்டும் என்றும், அதில் குறித்த மாணவர் அறநெறிப் பாடசாலைக்கு சமூகமளித்ததை உறுதிப்படுத்தும் வகையில் அறநெறிப் பாடசாலை ஆசிரியரினால் பதியப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

மேல் மாகாணத்தில் கல்வி கற்கும் மாணவர்களின் ஒழுக்கநெறி மற்றும் கல்வி மேம்பாடு போன்ற நோக்கங்களைக் கருத்தில்கொண்டே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பாடசாலை முகாமைத்துவ டிப்ளோமா பாடநெறி

## விண்ணப்பங்களை அனுப்பலாம்

தேசிய கல்வி நிறுவகத்தினால் நடத்தப்படுகின்ற பாடசாலை முகாமைத்துவ டிப்ளோமா பாடநெறிக்கான விண்ணப்பங்களை அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது.

குறித்த பாடநெறிக்கு விண்ணப்பிப்பவர்கள் இலங்கை கல்வி நிர்வாக சேவை, அதிபர் சேவை, கல்வியியலாளர் சேவை ஆகியனவற்றில் இருப்போராகவும் ஆசிரியர் சேவை தரம் 1 அல்லது தரம் 2 தகுதியை உடையவராகவும் அல்லது அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனமொன்றின் தலைவராகவும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பத்துடன் விண்ணப்பப் படிவக் கட்டணமாக 200 ரூபாவும் தெரிவுப் பரீட்சைக்கான கட்டணம் 250 ரூபாவும் இலங்கை வங்கியின் ஏதேனும் ஒரு கிளையினூடாக, தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 7041168 என்ற கணக்கிலக்கத்திற்கு வைப்புச் செய்து உரிய பற்றுச்சீட்டுடன் உதவிப் பணிப்பாளர் நாயகம், கல்வி தலைமைத்துவ விருத்தி நிலையம், தேசிய கல்வி நிறுவகம், மீபே சந்தி, பாதுக்கை என்ற முகவரிக்கு பெப்ரவரி 28 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்புதல் வேண்டும்.

விஜய் Vijey
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk

# 8 நாடுகளிலிருந்து 114 புலமைப்பரிசில்கள்

## பல்கலைக்கழக அனுமதியை இழந்த மாணவர்களுக்கே வாய்ப்பு

### Scholarships



இலங்கை மாணவர்கள் வெளிநாடுகளில் உயர் கல்வியைத் தொடர்வதற்காக எட்டு நாடுகளிலிருந்து 114 புலமைப்பரிசில்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாக உயர் கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன தெரிவித்துள்ளார்.

2010 க.பொ.த உயர் தரப் பரீட்சையில் சித்தியடைந்து இந்நாட்டுப் பல்கலைக்கழகங்களில் அனுமதியைப் பெறத் தவறிய மாணவர்களிடையே இருந்து தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கே மேற்படி புலமைப்பரிசில்கள் வழங்கப்பட உள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். மருத்துவம், பல் மருத்துவம், முகாமைத்துவம், பொறியியல் போன்ற துறைகளில் பட்டப்படிப்பைத் தொடர்வதற்கே இந்த புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டுள்ளன.

அதன்படி, சீனாவிலிருந்து 20, இந்தியாவிலிருந்து 40, ரஷ்யாவிலிருந்து 20, கியூபாவிலிருந்து 5, பங்களாதேஷிலிருந்து 8, கொரியாவிலிருந்து 3, ஜப்பானிலிருந்து 12 மற்றும் பாகிஸ்தானிலிருந்து 6 என்ற ரீதியிலேயே மேற்படி புலமைப் பரிசில்கள் கிடைத்துள்ளதாக மேலும் [illegible]

# இவ்வருட இறுதியில் சனத்தொகை மதிப்பீடு

*இவ்வருட இறுதியில் நாடளாவிய ரீதியிலான சனத்தொகை மதிப்பீடு இடம்பெறவுள்ளதாக புள்ளிவிபரவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. கடந்த காலங்களில் நாட்டில் இடம்பெற்ற அசாதாரண சூழ்நிலை காரணமாக, சுமார் 30 வருடங்களாக நாடளாவிய ரீதியிலான சனத்தொகை மதிப்பீடு இடம்பெறவில்லை என அத்திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது. இலங்கையில் 1991, 2001 ஆம் ஆண்டுகளில் சனத்தொகை கணக்கெடுப்பு இடம்பெற்றபோதும், அதில் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் உள்ளடக்கப்படவில்லை. எனினும், இவ்வருடத்தில் அது நாடளாவிய ரீதியில் இடம்பெறவுள்ளதாக மேலும் அறியக்கிடைக்கின்றது.*



# பரிசுப் போட்டியில் வெற்றி பெற்றவர்கள்

(கடந்த வாரத் தொடர்ச்சி.....)

**ட மக்ஸ் (Tea Mugs) வெற்றியீட்டியோர்:**



75. கே.கே.எஃப்.அஸ்மா, 146/1, திமுதுகம, வெலிமட.
76. அ.லிதுர்ஷினி, 146/2, குட்செட் வீதி, வவுனியா.
77. எஃப்.சௌமியா ஸுஹைர், 384/A, எகொடஉயன, மோதர, மொரட்டுவ.
78. எம்.எல்.எம்.ரியாஜ், 14, மணல்குன்று வீதி, புத்தளம்.
79. எம்.டபிள்யூ.ஏ.அஃப்ரார், 288/1, 'A212A House', கந்தர.
80. எம்.எச்.அன்ஷுப், 98/4, கொழபகேவத்த, பெலியத்த வீதி, திக்குவல்லை.
81. ஏ.அஸ்னா, 227, நஸார் மாவத்தை, மல்லவபிடிய, குருணாகலை.
82. என்.ஜே.எம்.இமாத், 8/1, அருணலு உயன, அருணோதய மாவத்தை, ராஜகிரிய.
83. டி.முஹம்மட் பர்ஜிஸ், 42/B1 அல்-முனீர் வீதி, சம்மாந்துறை.
84. ஏ.ஏ.எஃப்.இஷ்ஃபா, 5, கொட்டேகொட, வெலிகம.
85. இஸட்.எஃப்.வஸ்மா, 14/3, மீராபள்ளி ஒழுங்கை, காத்தான்குடி-05.
86. எம்.ஆர்.றிஸ்னா பானு, 37, கெமுனு மாவத்தை, கந்தளாய்.
87. எம்.என்.எஃப்.ரிஸானா, மாஞ்சோலைச்சேனை, ஹிஜ்ரா வீதி, கிண்ணியா-03.
88. இஷானா மனாஃப், 186, கண்டி வீதி, பறகஹதெனிய.
89. எம்.ஏ.எஃப்.அஷ்ஃபா, 13/6, வெல்பொலதெனிய, மாவனல்லை.
90. து.பாலன், 103, பா.சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம், யாழ்ப்பாணம்.
91. மயூரி திருஞானசெல்வன், பிள்ளையார் கோவிலடி, மாதகல்.
92. மெ.மரிய மிதுரா, மே/பா ஆரோக்கியநாதர், உயரப்புலம், ஆனைக்கோட்டை.
93. இ.ஆரோன் மேஷாக், 979, அன்புவழிபுரம், கன்னியா வீதி, திருகோணமலை.
94. கோபிகா பஞ்சலிங்கம், 13, 8 ஆம் ஒழுங்கை, நெளுக்குளம், வவுனியா.
95. ஏ.என்.எஃப்.நிஹ்ஸாத், 20A, ஒழுங்கை 03, ஸ்பில் வீதி, புத்தளம்.
96. எம்.டி.ஹசன், 02, ஆண்டியகடவத்த வீதி, கம்பளை.
97. எம்.ஏ.எம்.அனாஸ், 207/1, தெமட்ட கஹாமுலதென்ன, அக்குறனை.
98. ஹஃப்ஸா நஸீர்தீன், 352, மடலகம, பொல்கஹாவெல.
99. கா.அபிஷேக் கோபால், D9, 2 ஆம் நவகம்புர, கொழும்பு-14.
100. ஏ.ஆர்.ஏ.ஷௌகீ, 71-5C My Apartments, ஆராமய வீதி, தெமட்டகொட.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சுதந்திரப் பயணத்தின் சில முக்கிய தடங்கள்


தர்மாலோக தேரர்


சேர்.பொன்.அருணாசலம்


குணானந்த தேரர்


ஸ்ரீ சுமங்கல தேரர்


டி.எஸ்.சேனநாயக்க


சேர்.டி.பி.ஜயதிலக்க


டி.ஆர்.விஜயவர்தன

இலங்கையின் சுதந்திரப் போராட்டம் பல விசித்திர நிகழ்வுகளை உள்ளடக்கிய ஓர் உன்னத பயணமாகும். அப்போராட்டத்தில் பல முக்கிய நிகழ்வுகளும் திருப்புமுனைகளும் வரலாற்றுப் பதிவுகளும் அடங்கும். 1948 இல் நாம் பெற்ற சுதந்திரம் போராட்டங்கள் பலவற்றின்மூலம் கிடைத்த வெற்றி ஆகும்.

1818 ஆம் ஆண்டு நிகழ்ந்த கண்டிக் கிளர்ச்சியின் காரணமாக, சில பாடங்களைக் கற்ற ஆங்கிலேயர் இந்நாட்டின் ஆட்சிமுறையில் சில மாற்றங்களைக் கொண்டுவர எண்ணினர். அதனை நிறைவேற்றுவதற்காக குறிப்பாக அரசியல் சீர்திருத்தத்தை நடைமுறைப்படுத்தும் நோக்கில் கோல்புரூக் மற்றும் கெமரன் ஆகிய இருவரின் தலைமையில் ஆணைக்குழு ஒன்றினை நியமித்தனர்.

## நிறைவேற்று சபை

கோல்புரூக் ஆணைக்குழுவினர் இந்நாட்டிலுள்ள உள்நாட்டு, வெளிநாட்டுப் பிரஜைகளுடன் பேசியும் நாடுபூராகவும் விஜயங்கள் செய்தும் உரிய தகவல்களை சேகரித்துக் கொண்டனர். அத்துடன், அவர்கள் இந்நாட்டின் அரச நிர்வாக இயந்திரம், வருமானம், இராஜகாரிய முறை மற்றும் நீதிமன்ற நிர்வாகம் குறித்த தமது அறிக்கையை பிரித்தானிய நிர்வாகத்திடம் ஒப்படைத்தனர்.

கோல்புறூக் ஆணைக்குழுவின் ஆலோசனைகளில் மிக முக்கியமானதாகக் கருதப்படுவது, அதுவரை காலமும் ஆள்பதியிடம் இருந்த சர்வாதிகார அதிகாரங்களைக் குறைத்து அரசியலமைப்புச் சபை மற்றும் நிறைவேற்று சபை என இரு சபைகளை உருவாக்க ஆலோசனை வழங்கியமையாகும். பிற்காலத்தில் இந்நாட்டில் நாடாளுமன்ற அரசியலமைப்பு வரை அபிவிருத்தி அடைந்தது இந்த இரு சபைகளுமாகும். இதனை 'சட்டசபை' என்றும் சட்ட 'நிரூபண சபை' என்றும் அழைப்பர். சுருங்கக்கூறின், இன்றைய நாடாளுமன்றத்தின் குழந்தையாக அன்று மலர்ந்த இந்த சட்டசபையே இன்று வளர்ச்சி அடைந்து ஒரு சிறப்பான இடம் பெற்றுள்ளது எனலாம்.

## சைவ, பௌத்த பாடசாலைகள்

1815 ஆம் ஆண்டு கண்டி உடன்படிக்கையின்போது, இந்நாட்டின் பிரதான மதமாகிய பௌத்த மதத்தைப் பாதுகாப்பதாக ஆங்கிலேயர் உடன்படிக்கையில் குறிப்பிட்டாலும் அதனை சரியான முறையில் செயற்படுத்தவில்லை. அவர்கள் பௌத்த சமயம் குறித்தும் பௌத்த கல்வி குறித்தும் அதிக அக்கறை கொள்ளவில்லை. அதுபோலவே சைவ மற்றும் இஸ்லாமிய மதங்கள் குறித்தோ, அம்மதங்கள் சம்பந்தமான கல்வி குறித்தோ எவ்வித அக்கறையும் கொள்ளவில்லை. எனவே, இந்து, பௌத்த, இஸ்லாமிய மக்களின் மத உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கில் சுதேச இயக்கங்களையும் சீர்திருத்த இயக்கங்களையும் கட்டியெழுப்ப வேண்டும் என்ற உணர்வு மேலோங்கியது.

ஆறுமுகநாவலர், அறிஞர் சித்திலெப்பை போன்றவர்கள் தமது மதத்தையும் கலை, கலாசாரங்களையும் பாதுகாக்க வேண்டுமென்ற நோக்கில் பல நூல்களை எழுதியதோடு, பல சைவ, இஸ்லாமிய பாடசாலைகளையும் ஆரம்பித்தனர். அக்காலத்தில் ஆங்கில மொழி மூலப் பாடசாலைகளே நாடு முழுவதும் இருந்தன. அதற்கு மாறாக இவர்கள் சிங்கள மற்றும் தமிழ்மொழி மூல பாடசாலைகளை ஆரம்பித்தனர்.

## இடதுசாரி இயக்கங்கள்

பிலிப் குணவர்தன, கலாநிதி என்.எம். பெரேரா, கலாநிதி கொல்வின் ஆர்.டி.சில்வா, கலாநிதி எஸ்.எ.விக்ரமசிங்ஹ ஆகிய புத்திஜீவிகளின் தலைமையில் 1930 களின் ஆரம்பத்தில் இந்நாட்டில் ஆரம்பிக்கப்பட்ட இடதுசாரி இயக்கமானது நன்கு வளர்ச்சி அடைந்து நாட்டின் மற்றுமொரு சுதந்திரப் போராட்ட சக்தியாகப் பரிணமித்தது. 1935 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட லங்கா சமசமாஜக்கட்சி இலங்கையின் முதலாவது அரசியல் கட்சியாகத் திகழ்வதோடு, அதன் நோக்கம் ஒடுக்கப்படும் மக்களின் விடுதலை மாத்திரமல்லாது முழு இலங்கைக்கும் சுதந்திரத்தைப் பெற்றுக்கொடுப்பதாக இருந்தது.

ஆங்கிலேயர்கள் இந்நாட்டு மக்களுக்கு அறிமுகப்படுத்திய மது பாவனையால் சமூகத்தில் பல சீரழிவுகள் ஏற்பட்டன. மதுபானத்தை அருந்துபவர்களின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்ததோடு, மது விற்பனை நிலையங்கள் நாடு பூராகவும் அதிகரித்தன. ஆங்கிலேயரின் இச்செயற்பாட்டிற்கெதிராக, சுதேச தலைவர்கள் போராட்டங்களை ஆரம்பித்தனர். இத்தகைய பேராட்டங்களுக்கு தலைமை தாங்கியவர்களில் ஜேம்ஸ் பீரிஸ், டி.பி.ஜயதிலக, மார்க்ஸ் பெர்னாண்டோ, சி.எ.ஹேவாவிதாரன, டி.ஆர்.விஜயவர்தன, டி.எஸ்.சேனநாயக்க முதலிய தேசப்பற்றுள்ள தலைவர்கள் முக்கியமானவர்களாவர். இச்சீர்திருத்த இயக்கங்கள் சுதந்திரப் போராட்டத்திற்கு வலிமை சேர்த்தன.

## தேசிய சங்கம்

நாட்டின் சுதந்திரப் போராட்டத்தில் சேர். பொன்.இராமநாதன், சேர்.பொன்.அருணாசலம் போன்றவர்களின் பங்களிப்பும் அளப்பரியது. சேர்.பொன்.இராமநாதனின் சுதந்திரத்திற்கான அளப்பரிய பங்களிப்பு தேர்தல் மூலம் மக்கள் அவரைத் தெரிவு செய்யக்காரணமாக அமைந்தது. வாக்களிப்பின் மூலம் நாட்டில் தெரிவு செய்யப்பட்ட முதலாவது இலங்கையர் சேர்.பொன்.இராமநாதன் என்பது குறிப்பிடத்தக்கது.

## சுதந்திரத்தைப் பெறல்

சேர்.டொனமூர் யாப்பின்படி, முதன் முதலாக சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்டது. இனவாரியான பிரதிநிதித்துவம் நீக்கப்பட்டு பிரதேசவாரி பிரதிநிதித்துவம் அறிமுகப்படுத்தப்பட்டது. நாடு 50 பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டு 50 பேர் தேர்தல் மூலமாகத் தெரிவு செய்யப்பட்டனர். அவ்வாறு தெரிவு செய்யப்பட்டவர்கள் 7 நிர்வாகக் குழுக்களாகப் பிரிந்து அமைச்சரவை போல் நாட்டின் நிர்வாகக் கடமைகளில் ஈடுபட்டனர். எனினும், நாட்டின் அதிஉயர் பதவிகளான நிதிச் செயலாளர், நீதிச் செயலாளர், பிரதான செயலாளர் என்ற மூன்று பதவிகளும் ஆங்கிலேயர் வசமே இருந்தன. இதனால், முழுமையான சுதந்திரக் காற்றை சுவாசிக்க முடியவில்லை.

அதன்படி, இலங்கைக்கு வந்த ஆணைக்குழுவிற்கு தலைமை தாங்கியவர் சோல்பரி அவர்கள் அவர் முன்வைத்த அரசியல் யாப்பில் சுதந்திரத்திற்கான பல அம்சங்கள் உள்ளடக்கப்பட்டன. இரு சபைகளைக்கொண்ட நாடாளுமன்றம் உருவாக்கப்பட்டு தேர்தல் தொகுதிகள் பிரிக்கப்பட்டன. தேர்தல் மூலம் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டு அதிக ஆசனங்களைப் பெற்ற கட்சி ஆட்சி அமைப்பதோடு, அக்கட்சியினர் தெரிவு செய்யும் தலைவர் நாட்டில் பிரதமராகத் தெரிவு செய்யப்படுவார். அத்தகைய முதலாவது தேர்தல் 1947 இல் ஓகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி நடைபெற்றது. இதன் பின்னர் 1948 பெப்ரவரி 4 ஆம் திகதி பிரித்தானியரால் இலங்கைக்கு சுதந்திரம் வழங்கப்பட்டது.

-இரஞ்சித் ஜெயகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்சத்திர மோதலினால் ஏற்பட்ட தீ வலயம் விரிவடைகின்றதாம்!





இற்றைக்கு பல மில்லியன் வருடங்களுக்கு முன்னர் இரண்டு நட்சத்திர ஒளிமண்டலங்கள் ஒன்றோடொன்று மோதியதன் விளைவாக உருவான தீப்பிழம்பின் தீ வலயம் இன்றும் விரிவடைந்த வண்ணமே உள்ளது என விண்வெளி ஆய்வு குறித்த இன்றைய உலகின் முதன்மையான பேரறிஞரும் 'ஸ்பிட்சர்' தொலைக்காட்டியின் நிர்மாணிப்பாளரும் ஹாவர்ட் பல்கலைக்கழக பௌதீக நட்சத்திர விஞ்ஞானியுமான கியொவான் ஃபெலியோ தெரிவித்துள்ளார்.




'ஸ்பிட்சர்' தொலைக்காட்டியின் மூலம் எடுக்கப்பட்ட 'என்ட்ரோமீடா' நட்சத்திரமண்டலத்தின் படம் இதனை உறுதி செய்வதாக 'நேச்சர்' சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் அவர் குறிப்பிட்டுள்ளார். டைனோசர் இவ்வுலகில் நடமாடிய யுகமாகிய இற்றைக்கு 210 மில்லியன் வருடங்களுக்கு முன்னர் இப்பாரிய மோதல் நடந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.


இந்நிகழ்வு பற்றி அவர் மேலும் குறிப்பிடும்போது; "என்ட்ரோமீடா நட்சத்திரத் தொகுதியின் இரு அங்கத்துவ நட்சத்திரங்களையும் சாதாரண நட்சத்திரங்களாகவே இதுவரை விஞ்ஞானிகள் கருதினர். ஆனால், மேற்குறித்த ஆய்வு இதனை மாற்றியமைக்க உள்ளது'' என்றார். அத்துடன், எமது புவியிலிருந்து 2.5 ஒளியாண்டுகள் தொலைவில் அமைந்துள்ள என்ட்ரோமீடா நட்சத்திரமண்டலமே புவிக்கு மிக அண்மையில் அமைந்துள்ள நட்சத்திரமண்டலம் என்பது குறிப்பிடத்தக்கது.

## நட்சத்திரங்களின் தோற்றம்



பிரபஞ்சத்தில் மிதக்கும் விசாலமான வளிமண்டலம் மற்றும் புழுதி மேகத்தின் மத்தியிலேயே நட்சத்திரத்தின் தோற்றம் நிகழ்கின்றது. இந்த வளிமண்டலத்தையும் புழுதி மேகத்தையும் 'நெபியுலா' அல்லது 'நீஹாரிகா' என அழைக்கின்றனர். நெபியுலாவில் உள்ள தூசு மற்றும் வாயு என்பன ஒன்றிணைந்து சிறிய திணிவொன்று உருவாகின்றது. காலம் செல்லச் செல்ல மேலும் வாயுவும் தூசும் இதனுடன் இணைந்துகொள்ளும். அவை மென்மேலும் அதிகரிக்க அதிகரிக்க வெப்பத்தை வெளிவிட ஆரம்பிக்கும். இதனையடுத்து, அணு மீள் செயற்பாட்டின் விளைவாக நட்சத்திரத்தின் தோற்றம் நிகழ்கின்றது.

# பிரபஞ்சத்தின் மர்மங்களை ஆராய்ந்தவரின் மரணத்தில் மர்மம்




16 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த உலகப் புகழ்பெற்ற வானியல் ஆராய்ச்சியாளரான டை(க்)கோ ப்ராஹே (Tycho Brahe), நட்சத்திரங்கள் மற்றும் கிரகங்கள் பற்றி மட்டுமல்லாது பிரபஞ்சத்தின் பல்வேறு ரகசியங்களையும் உலகிற்கு வெளிப்படுத்திய பெருமைக்குரியவராகத் திகழ்ந்தார். எனினும், பிரபஞ்சத்தின் மர்மங்களை உலகிற்கு வெளிப்படுத்த முயற்சித்த அவரது மரணம் இன்று வரை மர்மம் நிறைந்ததாகவே அமைந்துவிட்டது.




எனினும், டை(க்)கோ ப்ராஹேயின் மரணத்தின் மர்மத்தைத் துலக்கவும் அவரின் உடற்பகுதிகளை ஆய்வு செய்து உண்மையை அறியவும் ஆய்வுக்குழு ஒன்று தயாராகி வருகின்றது. அண்மையில் அந்த ஆய்வுக்குழுவினர் ப்ராஹேயின் பூதவுடல் அடக்கம் செய்யப்பட்டுள்ள செக்கோஸ்லோவேக்கியா நாட்டிலுள்ள பிராக் நகரில் அமைந்துள்ள தேவாலயத்திற்குச் சென்று, பூதவுடலின் பகுதிகளை அகழ்ந்து எடுத்துள்ளனர். அதற்காக அவர்கள் எட்டு மணித்தியாலங்களைச் செலவிட்டுள்ளனர்.

இதற்கு முன்னரும் அதாவது, 1901 ஆம் ஆண்டும் ப்ராஹேயின் பூதவுடல் பகுதிகள் இவ்வாறு ஆய்வாளர்களால் அகழ்ந்து எடுக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. இவர் இறக்கும் பொழுது இவருக்கு வயது 54 ஆகும். அவர் எவ்வாறு இறந்தார் என்பதனை இதுவரை கண்டறிய முடியவில்லை. எனவே, ஆய்வாளர்கள் இதற்காக நவீன தொழில்நுட்ப உதவிகளைப் பெறுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர்.

## நுண்ணலைக் கெமராக்கள்

இன்று விஞ்ஞானிகளின் பற்பல ஆய்வுகளுக்குப் பயன்படும் ஒரு கருவியாக 'நுண்ணலைக் கெமராக்கள்' திகழ்கின்றன. இதனை 'எக்ஸ்ரே கெமராக்கள்' என்றும் அழைக்கின்றனர். இன்றளவில் இருளில் அல்லது மூடுபனியில் தரையிறங்கும் விமானங்கள் ஓடுதளத்தை கண்டுணர்ந்து முன்னேற இந்த நுண்ணலைக் கெமராக்கள் உதவுகின்றன.






கெலிஃபோர்னியாவின் சென்டியாகோ என்ற இடத்தில் உள்ள தெர்மோ டிரெக்ஸ் என்ற இலத்திரனியல் நிறுவனம், ஜோன் லவ் பெர்க் என்ற பொறியியல் வல்லுனரின் தலைமையின்கீழ் கண்டுபிடிக்கப்பட்டுள்ள இந்த நுண்ணலைக் கெமராவானது மேகம், புகை, பனி மூட்டம் என்பனவற்றின் ஊடாக, நுண்ணலைக் கதிர்களை ஊடுருவச் செய்யக்கூடியது. இவ்வகைக் கெமராக்களில் பல சென்ரிமீற்றர் அலை நீளம்கொண்ட நுண்ணலை சமிக்ஞைகளைப் பயன்படுத்தக்கூடியதிறன் காணப்படுகின்றது. எனவேதான் இவற்றை எக்ஸ்ரே கெமராக்கள் என்கின்றனர்.

பொதுவாக, ரேடாரில் பயன்படும் நுண்ணலை சமிக்ஞைகள் போன்று (Microwave Signals) மேகங்கள், பிற வானூர்திகள் போன்றவற்றை இனங்காணவும் இந்த கெமராக்கள் பயன்படுகின்றன. மிகுந்த உயரங்களில் இருந்தும்கூட இவ்வலைகளின் பிரதிபலிப்பை நன்கு கிரகித்துக்கொள்ளலாம்.

மேலும், ராணுவ விமானங்கள் இரவு நேரங்களில் விமானப் பாதையைத் தெளிவாகப் பார்க்க அகச்சிவப்புக் கதிர்கள் (Infared Imaging) பயன்படுகின்றன. ஆனால், மூடுபனி மற்றும் மழை போன்ற இயற்கை விளைவுகள் இந்த அகச்சிவப்பு அலைநீளங்களைச் சிதறடித்து விடுகின்றன. எனவே, தற்போது மேற்கூறிய குறைபாடுகளை போக்கக்கூடியதாக இப்புதிய கெமரா அமைந்துள்ளது. அளவில் சிறிய, அன்டெனாவுடன் கூடிய இக்கெமராவை விமானத்தின் முகப்பில் பொருத்தி விடலாம். தேவையான நேரம் அந்தக் கெமராவின் காட்சித்திரையில் விமானி ஓடுதளத்தை தெளிவாகக் காணலாம்.

-(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்பொழுது, எங்கு, எச்சந்தர்ப்பத்தில் முதலுதவி தேவைப்படும் என்பதை நாம் அறிய முடிவதில்லை. எனவே விபத்துகளின்போது, ஏற்படும் பாதிப்புகளைத் தடுப்பதற்கான முதலுதவிகள் பற்றி அறிந்திருப்பது பெரும் பயன்தரக் கூடியதாகும். நோயாளிக்கு உரிய மருத்துவ சிகிச்சைகள் கிடைக்கும்வரை முதலுதவியைப் பெற்றுக் கொடுப்பது நோயாளிக்கு ஏற்படும் சிக்கல்களை அல்லது உயிராபத்தைத் தடுப்பதற்கு உதவும். அந்தவகையில், நாம் இங்கு அன்றாட வாழ்க்கைக்குத் தேவைப்படும் முதலுதவிகள் சிலவற்றைப் பார்ப்போம்

# மருத்துவமனை வழங்கப்படும்

## முதலுதவி என்பது

திடீர் விபத்துக்களின்போதோ, நோய் நிலைமைகளின்போதோ சுற்றுப்புறத்தில் கிடைக்கும் ஏற்றுக்கொள்ளப்பட்ட முதலுதவி முறைகளைப் பின்பற்றி வைத்தியரிடம் நோயாளியை அழைத்துச் செல்லும்வரை பயிற்சி பெற்ற முதலுதவியாளர்களால் வழங்கப்படும் தற்காலிக உதவிகளே முதலுதவியாகும்.

## முதலுதவிகளின் நோக்கம்

உயிரைக் காப்பாற்றுதல், நோய் நிலை அதிகரிப்பதைத் தவிர்த்தல் அல்லது தடுத்தல் குணமாதலை இலகுபடுத்தல்

## முதலுதவியாளரின் பொறுப்பும் கடமையும்

தமக்கு ஆபத்து ஏற்படாத வகையில் விபத்துக் குறித்து அறிந்து கொள்ளல் நோய் நிலையை அறிந்திருத்தல், விபத்துக்குள்ளானவர்களுக்கு அல்லது நோயாளர்களுக்கு முதலுதவி வழங்குதல், நோயாளியின் மோசமான நிலைமையின் அடிப்படையில் உரிய முதலுதவிகளை வழங்குதல், நோயாளியை மருத்துவமனைக்கு விரைவாக எடுத்துச் செல்லல், நோயாளி குறித்து அறிக்கை ஒன்றைப் பெறல்(நோயாளியின் பெயர், வயது, நோய் நிலைமை என்பன)

## உடனடியாக முதலுதவி வழங்கப்பட வேண்டிய சந்தர்ப்பங்கள்

சுவாசம் தடைப்படும் போது, (உதார; விஷத்தை நுகருதல், உணவு அடைத்துக் கொள்ளல், நீரில் மூழ்குதல், அதிக இரத்தப் போக்கு) (உதார: வெட்டு, உராய்வு)
மயக்க நிலை (விஷம் உடலுக்குள் சென்ற நிலை)

## செயற்கை சுவாசம் வழங்குதல்



பார்த்தல், கேட்டல், அறிதல், ஆகிய மூன்று முறைகளிலும், சுவாசத்தை ஆராயலாம். அதாவது, நெஞ்சுப் பகுதி மேலே, கீழே இறங்குகின்றதா? என்பதை அவதானிப்பதன் ஊடாகவும், நெஞ்சுப் பகுதியில் காதை வைத்து இதயத் துடிப்பைக் கேட்பதன் ஊடாகவும், கைகளை மூக்குக்கு அண்மையில் வைத்து சுவாசம் நடைபெறுகின்றதா? என்று அறிவதன் ஊடாகவும் நோயாளி சுவாசிக்கின்றாரா? என்பதை அறிந்து கொள்ள முடியும். நோயாளியின் சுவாசம் நடைபெறவில்லையாயின் கீழே குறிப்பிடப்படும் வகையில் செயற்கைச் சுவாசம் அளிக்கப்படல் வேண்டும்.

முதலில் நோயாளியின் நெற்றியில் மற்றும் நாடியில் பிடித்தபடியே, தலையை சற்று மேலே தூக்கி சுவாசப் பாதையைத் திறக்கவும்.

நோயாளியின் மூக்குத் துவாரங்களை மூடும் வகையில் இரண்டு விரல்களினால் மூக்குப் பகுதியை அழுத்திப் பிடித்தபடியே, நன்கு சுவாசம் எடுத்து நோயாளியின் வாயின் மீது உங்கள் வாயை வைத்து இருமுறை சுவாசத்தைச் செலுத்தவும்.

இரண்டு முறை சுவாசத்தை வழங்கிய பின்னர் நெஞ்சுப் பகுதியினை முப்பது தடவைகள் அழுத்துங்கள்.

செயற்கைச் சுவாசத்தை வழங்கிய பின்னர் முதலில் கூறியதனைப் போன்று பார்த்தல், கேட்டல், அறிதல் ஊடாக, நோயாளி சுவாசிக்கின்றாரா? என்பதைப் பரிசீலித்துப் பாருங்கள்.

## நெஞ்சுப் பகுதியை அழுத்துதல்



இரு கைகளையும் நோயாளியின் நெஞ்செலும்பின் மீது வைத்து அழுத்துதல், நெஞ்சுப் பகுதியை அழுத்துதல், எனப்படும் இதனை மூன்று முறைகளில் செய்யலாம்.


வயது வந்தோருக்கு-இரு கைகளாலும் பிள்ளைகளுக்கு-ஒரு கையால் குழந்தைகளுக்கு இரு விரல்களால் (நடுவிரல் மற்றும் ஆட்காட்டி விரல்) செய்யப்படல் வேண்டும்.

## எரிகாயம்



நெருப்பு, 'ஆசிட் ஆகிய இரசாயனத் திரவங்கள், மின்சாரம், கதிர், கொதிநீர், சூரிய ஒளி, சூடான பொருளின் மீது உராய்தல் போன்ற காரணங்களினால் உடலில் எரிகாயம் ஏற்படக்கூடும். இதனால், அதிக வேதனை உணர்வு, சிறுநீர் வெளிவரல், எரிந்த பகுதி விகாரமடைதல் ஆகிய அறிகுறிகள் ஏற்படும். எரிகாயம் ஏற்பட்டவுடன் முதலுதவி வழங்கப்பட முன் எரிகாயம் ஏற்பட்ட இடத்தையும், எரிகாயத்தின் அளவு, எரிகாயத்தின் ஆழம் என்பனவற்றையும் ஆராய்ந்து பார்க்க வேண்டும். உடலில் எரிகாயத்தின் 'அளவை ஆராயும்போது,உடலை நூறு பகுதிகளாகப் பிரித்துப் பார்க்கப்படல் வேண்டும். அதாவது, இதில் நூற்றுக்கு ஒன்றாகக் கருதப்படுவது உள்ளங்கை அளவாகும். பொதுவாக, நூற்றுக்கு ஒரு வீத அளவு எரிகாயம் ஏற்பட்டிருப்பின், உயிரை இழக்கும் வாய்ப்பு மிகவும் குறைவாகும். 'நூற்றுக்கு 10-15 அளவு எரிகாயம் ஏற்பட்டிருப்பின், அது ஆபத்தான நிலைமையாகும். இதனால், உயிர் இழக்கப்படும் வாய்ப்பும் உண்டு. எரிகாயத்தின் ஆழம், உணரப்படும் வேதனையின் அடிப்படையிலேயே இது தீர்மானிக்கப்படும். எரிகாயத்தின் வேதனை அதிகமாயின் அவ்வளவு ஆழமான காயம் ஏற்படவில்லை என்று அர்த்தம். வேதனை உணரப்படவில்லையாயின் ஆழமான எரிகாயம் ஏற்பட்டுள்ளது என்று அர்த்தம். ஏனெனில், சிறியளவிலான எரிகாயத்தின்போது, நரம்புகள் பாதிக்கப்படுவதனால் வேதனை அதிகமாக உணரப்படும். எனினும், மிகவும் ஆழமாக எரிகாயம் ஏற்பட்டால் நரம்புகளுக்கு பாதிப்பு ஏற்படுவதன் மூலம் வேதனை உணரப்படமாட்டாது.

## முதலுதவிப் பெட்டியில் இருக்க வேண்டியவை




## முதலுதவிப் பெட்டி

**அவசர விபத்தின்போது அல்லது நோய் நிலைமையின் போது பயன்படுத்த முதலுதவிப் பெட்டியானது மிகவும் முக்கியமானதாகும். இது இலகுவில் பயன்படுத்தக்கூடியதாகவும், தூசி மற்றும் அழுக்குப் படியாததாகவும் சுத்தமாகவும் இருக்க வேண்டும். காலாவதியான மருந்துகளை மாற்றி வைத்து முதுலுதவிப் பெட்டியை உரிய முறையில் பாதுகாக்க வேண்டும்.**

## எரிகாயத்தின்போது வழங்கப்பட வேண்டிய முதலுதவி

விபத்துக்குள்ளானவரை நெருப்பிலிருந்தும், புகையிலிருந்தும் மீட்டெடுங்கள். ஆடையில் தீப்பற்றியிருந்தால் மொத்தமான போர்வை அல்லது சாக்கு (வெப்பம் அற்றது ஒட்டாதது) கொண்டு உடலைப் போர்த்தி கீழே உருட்டி விடுங்கள் மண்ணெண்ணெய், பெற்றோல் ஆகியவற்றினால் ஏற்பட்ட தீ விபத்தாயின், தீயை அணைக்க முக்கியமாக நீரைப் பயன்படுத்தாதீர்கள்.

நோயாளியின் அச்சத்தைப் போக்குங்கள். எரிகாயங்களின் அளவு, ஆழத்தைப் பாருங்கள்.

எரிகாயங்கள் மீது குளிர் நீரினால் ஒத்தடம் கொடுங்கள்.

உடலில் எரிகாயங்கள் மீது ஒட்டியுள்ள ஆடைகளை அகற்றுவதனைத் தவிர்த்து விடுங்கள்.

மோதிரம், வளையல், மாலை ஆகிய அணிகலன்களை உடலில் இருந்து அகற்றி விடுங்கள்.

தொற்றுக்கள் பரவுதலைத் தடுக்கவும். உடல் வெப்பநிலையைப் பாதுகாக்கவும் மொத்தமான போர்வையைப் போர்த்துங்கள்.

வேறு பாதிப்புகள் உள்ளனவா என்று சோதித்துப் பாருங்கள்.

எண்ணெய் இதர கிறீம் வகைகளை எரிகாயங்கள் மீது பூசுவதைத் தவிர்த்து விடுங்கள்.

கொப்புளங்களை உடைப்பதைத் தவிர்த்து விடுங்கள்.

நோயாளியை உடனடியாக மருத் சிகிச்சைகளுக்காக மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லுங்கள்.

## தொண்டையில் ஏற்படும் அடைப்புக்கள்

தொண்டையில் ஏதேனும் அடைத்துக் கொண்டால் இருமல், தொண்டைவலி பேசுவதற்கு அசௌகரியம் ஆகிய அறிகுறிகள் ஏற்படும். இதனை



பொதுவான அடைப்பு, முழுமையான அடைப்பு என்று இரண்டாகப் பிரிக்க முடியும். சாதாரண அடைப்பின்போது. பேசுவதற்கு இடையூறு, தொண்டை நோ,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# னக்கு செல்லும் முன்
# ம் 'உதவிகள்'



இருமல் ஆகிய அறிகுறிகள் ஏற்படும். முழுமையான அடைப்பின்போது இருமல், பேச முடியாமை, மயக்கநிலை, மூச்சுத்திணறல் என்பன ஏற்படக் கூடும். இவ்வாறான நிலைமைகளின்போது, கீழ்வரும் முதலுதவி முறைகளைக் கடைப்பிடியுங்கள்.

நோயாளியை இருமுமாறு ஊக்கப்படுத்துங்கள். நோயாளியின் பின்புறமாக இருந்தபடி முன்னால் அவர் குனிவதற்கு உதவும் வகையில் ஒரு கையை நோயாளியின் நெஞ்சுப் பகுதியில் வைத்தபடி, மறு கையால் முதுகில் பலமாக ஐந்து முறை தட்டுங்கள்.

## மயக்கம்



மூளைக்குத் தேவையான இரத்தம் போதுமானளவு கிடைக்காதனால் மயக்க நிலை ஏற்படுகின்றது. அதிக பயம், அதிக வேதனை, கடும் துன்பம், பட்டினி இருத்தல் என்பனவற்றுடன் நோய் நிலைமை அதிகரித்தல் உடல் பலவீனம், அதிகமான களைப்பு, அதிக வெப்பநிலை, அதிக இரத்தப் போக்கு என்பனவும் மயக்க நிலை ஏற்படக் காரணமாக அமைகின்றன.

## மயக்க நிலையின்போது முதலுதவி

நோயாளிக்கு நன்கு காற்றோட்டம் கிடைக்க வழி செய்யுங்கள். (நோயாளியை சூழ்ந்து நிற்காதீர்கள். இதனால், உரிய காற்றோட்டம் கிடைக்காது.

நோயாளிக்கு காற்று வீசுங்கள்

நோயாளியை கீழே அமர வைத்து தலையை முழங்கால்கள் மத்தியில் குனிய வைக்கவும். நோயாளியை களைப்புறச் செய்யாதீர்கள். முகத்தை குளிர் நீரால் நனையுங்கள். உதடுகளில் நீர் தெளியுங்கள். மயக்க நிலைக்கு என்ன காரணம் என்பதை அறிந்து தீர்வு காணுங்கள். (உதார: வெயிலில் நின்றதால் மயக்கம் ஏற்படின் நோயாளியை நிழல் உள்ள இடத்திற்கு அழைத்துச் செல்லுங்கள்) சாதாரண நிலைக்கு வந்தபின் சூடாக ஏதாவது அருந்தக் கொடுங்கள்.

## நீரில் மூழ்குதல்

நீரில் மூழ்கியுள்ள நபரின் உயிரைக் காப்பாற்ற முயலும்போது உங்கள் பாதுகாப்பைப் பற்றியும் கவனம் செலுத்த வேண்டும். உங்கள் உயிருக்கு ஆபத்து ஏற்படாத வகையில் கவனமாக நீரில் மூழ்கியவரைக் காப்பாற்ற முயலுங்கள்.

குறித்த நபரை நீரில் இருந்து வெளியே எடுத்த பின் வாயைத் திறந்து வாயினுள் மணல், சேறு, அழுக்குகள் இருப்பின் அவற்றை அகற்றி விடுங்கள்.



நோயாளி, சுவாசிக்கின்றாரா? என்று பாருங்கள். சுவாசிக்காவிடின், ஐந்து தடவைகள் செயற்கை சுவாசமும், நெஞ்சுப் பகுதியில் முப்பது தடவைகளும் அழுத்தம் வழங்கவும். அப்பொழுதும் நோயாளி சுவாசிக்காவிடின் இரு முறைகள் செயற்கை சுவாசமும், 30 தடவைகள் நெஞ்சு அழுத்தத்தையும் வழங்குங்கள். நோயாளியை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லும் வரை இவ்வாறு மாறி மாறி செயற்கை சுவாசம் வழங்கிக் கொண்டிருங்கள்.

## பாம்பு தீண்டினால் செய்ய வேண்டிய முதலுதவி



முதலில் நோயாளியின் அச்சத்தைப் போக்குங்கள்.

நோயாளியை வெறுப்படையச் செய்யாதீர்கள்.

பாம்பு தீண்டிய இடத்தை சவர்க்காரம் இட்டு நன்கு கழுவுங்கள்.

பாம்பு தீண்டிய பகுதியை சுரண்டவோ, வெட்டவோ செய்யாதீர்கள். அப்பகுதியை துணித்துண்டுகளால் கட்டாதீர்கள். நோயாளி சுவாசிக்காவிடின் செயற்கைச் சுவாசம் வழங்குங்கள். முடிந்தால் தீண்டிய பாம்பையும் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லுங்கள். (தீண்டிய பாம்பை இனம் காண்பது, சிகிச்சை அளிக்க இலகுவாக இருக்கும்.

## சுளுக்கு

சுளுக்கு என்பது உடலின் தசை நாரில் ஏற்படும் பிடிப்பு வீக்கம் அல்லது தசை நார் கிழிபடல் என்று கூற முடியும். சுளுக்கு ஏற்பட்டால் சுளுக்கு ஏற்பட்ட பகுதியை ஓய்வாக வைத்திருக்க வேண்டும். அப்பகுதியை குளிர் நீரால் ஒத்தி எடுங்கள். கட்டும் (Bandage) போடுங்கள். அப்பகுதியை தூக்கி உயரமாக வைத்திருங்கள்.



## காயங்கள்

உடலின் கலத்தில் சேதம் ஏற்படும் போதே காயம் ஏற்படுகின்றது. நசுங்குதல், உராய்தல், வெட்டுதல் எரிதல் ஆகியவற்றினால் காயங்கள் ஏற்படக் கூடும். இவற்றினால் இரத்தப் பெருக்கு ஏற்படும். இதனையே 'இரத்தப் போக்கு' என்பர் நமது உடலில் இரத்தத்தை எடுத்துச் செல்ல மூன்று பிரதான இரத்தக் குழாய்கள் உள்ளன. இவற்றில் உள் இரத்தப் போக்கு, வெளி இரத்தப் போக்கு என இரத்தப் போக்குகள் இரு வகைப்படும். வெளிப்புற இரத்தப் போக்கை நன்கு காண முடியும். உள்புற இரத்தப் போக்கைக் காண முடியாது. உள் இரத்தப் போக்கினால் காது, மூக்கு, வாய் பகுதியில் இரத்தம் வடியக்கூடும். தலைப்பகுதியில் பலமான அடி விழுதல், மூக்கில் அல்லது காதில் இரத்தம் வடிதல், சிறுநீர் பாதையில் காயம் ஏற்படின் சிறுநீருடன் இரத்தம் வெளியேறுதல் என்பனவற்றை உதாரணமாகக் கூறலாம்.



## காயத்திற்கான முதலுதவி

காயத்தினுள் வெளிப்பொருட்கள் ஏதேனும் இல்லையாயின் (உதார: கண்ணாடித் துண்டுகள், முட்கள்) காயத்திற்கு நேரடி அழுத்தம் கொடுங்கள். அதாவது, காயத்தை நன்கு துடையுங்கள்.

காயத்தை உயர்த்தி வைத்திருங்கள். காயப்பட்ட பகுதிக்கு அண்மித்ததாக இருக்கும் மூட்டுப் பகுதியை மடியுங்கள். (உதார: கைப்பகுதியில் காயம் ஏற்படின் கைமூட்டை மடிக்கவும்)

சுத்தமான துணியை நீரில் நனைத்து அதனைப் பிழிந்து காயத்தின் மீது இடுங்கள். (காயத்தினைக் குளிர வைத்தல்) காயத்தினை நீரால் கழுவுதல், காயம் மீது ஐஸ் கட்டி வைத்தல் என்பனவற்றைத் தவிர்த்து விடுங்கள்.

தாவரப்பகுதிகளைக் காயத்தின் மீது வைத்தலையும் தவிருங்கள்.

வைத்தியரிடம் நோயாளியை அழைத்துச் செல்லுங்கள். உட் காயத்தினால், மூக்கு, வாய், காது என்பனவற்றில் இருந்து இரத்தம் வெளியேறினால் உடனடியாக நோயாளியை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லுங்கள்.

## மோசமான விஷம்

கிருமி நாசினிகள், ஒரு சில மருந்துவகைகள், ஒரு சில உணவுகள் பானங்கள், சில விற்றமின்கள், பெற்றோல், மண்ணெண்ணெய், அசிட், ஆகிய அமிலவகைகள் எமது உடலுக்கு நஞ்சாகின்றன. விஷம் உடலுக்குள் செல்லும் வழிவகைகள் 3 உள்ளன.



வாயினால், மூக்கினால், மற்றும் தோலினால் விஷம் உடலுக்குள் பரவி விட்டால் முதலில் தெரியும் அறிகுறி வாந்தி மற்றும் மயக்கம் என்பனவாகும். இவ்வாறு விஷம் உட்கொண்டவருக்கு முதலுதவி செய்வதற்கு முன்பு உட்கொள்ளப்பட்டுள்ளது எவ்வாறான விஷம் என்பதனை அறிந்துகொள்ள வேண்டும்.

இதனைப் பாதிக்கப்பட்டவரிடம் கேட்டறிந்தோ அல்லது சுற்றுப்புறத்தில் இருக்கும் பொருட்களைக் கொண்டோ அனுமானிக்கலாம். சில விஷ வகைகளை உட்கொண்டபின் வாந்தி எடுக்கச் செய்வது தவறாகும். (உதார: பெற்றோல், மண்ணெண்ணெய், ஆசிட் மற்றும் ஒரு சில கிருமி நாசினிகள்) வாந்தி எடுக்கச் செய்வதனால் விஷமருந்தியவருக்குப் பாதிப்பு ஏற்படாது என்று அறிந்து கொண்டால் வாந்தி எடுக்கச் செய்யுங்கள். தலையை இரு புறமும் திருப்பி விட்டு இரு விரல்களினால் நாக்கைத் தேய்க்கவும்.அப்பொழுது வாந்தி ஏற்படும்.

வாந்தி எடுக்கச் செய்வதற்கு தேங்காய்ப் பால் கொடுப்பதனைத் தவிருங்கள்.

நோயாளியின் சுவாசத்தை பரிசோதித்துப் பாருங்கள்.

உடனடியாக நோயாளியை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லுங்கள்.

## எலும்பு முறிவு

எலும்பு உடைவு அல்லது வெடிப்பை எலும்பு முறிவு எனலாம். நேரடித் தாக்குதல், மறைமுகத் தாக்குதல், ஒரு சில நோய் நிலைமைகள், காரணமாகவும் எலும்பு முறிவுகள் ஏற்படக் கூடும். இதற்கான முதலுதவிகள் பின்வருமாறு:

எலும்பு முறிவு ஏற்பட்ட இடத்தை சரிப்படுத்த முயற்சிக்காதீர்கள். அந்தப் பகுதியினை அசைக்கவும் முயற்சிக்காதீர்கள். உணவுப் பானங்களை வழங்காதீர்கள். ஒரு சில வேளைகளில் எலும்பு முறிவு ஏற்பட்டால் அதற்கு சத்திர சிகிச்சை மேற்கொள்ள நேரிடும், சத்திர சிகிச்சைக்கு முன்பு உணவுப் பானங்களை உட்கொள்ளுதல் தவறு என்பதால் முன் எச்சரிக்கை நடவடிக்கையாக இது மேற்கொள்ளப்பட வேண்டும்.

எலும்பு முறிவு ஏற்பட்ட பகுதியின் நாடித்துடிப்பினைப் பரிசீலித்துப் பாருங்கள்.

விரைவாக நோயாளியை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சோமாலியா

**அமைப்பு:** பிரித்தானிய சோமாலி லேண்ட் 1884.
இத்தாலிய சோமாலி லேண்ட் 1889.
யூனியன் மற்றும் சுதந்திரம். 1960 ஜூலை முதலாம் திகதி.
**தேசிய பெயர்:** ஜம்ஹூயுரியாடா சோமாலியா (சோமாலியக் குடியரசு).
**ஜனாதிபதி** (2009): ஷரீஃப் அஹமட்.
**பிரதமர்** (2010): மொஹமட் அப்துல்லாஹி மொஹமட்.

## புவியியல்

இது ஆபிரிக்காவின் முகட்டில் ஆபிரிக்கக் கண்டத்தின் வடகீழ் மூலையில் அமைந்துள்ள ஒரு நாடாகும். ஏடன் குடாவில் அமைந்துள்ள இந்நாடு, இந்து சமுத்திரத்தில் நீண்ட கரையோரத்தைக் கொண்ட நாடாகும். ஜிபுட்டி நாட்டிற்கு வட மேற்கில் அமைந்துள்ள சோமாலியாவின் மேற்கே எதியோப்பியாவும் தென் மேற்கே கென்யாவும் அமைந்துள்ளன. சோமாலியாவில் இரு பிரதான நதிகள் பாய்கின்றன. ஷெபெல்லே மற்றும் ஜுபா ஆகிய நதிகளே அவையாகும்.

**மொத்தப் பரப்பு:** 2,46,199 ச.மைல் (637,657 ச.கி.மீற்றர்); **மொத்த நிலப்பரப்பு:** 242 216 ச.மைல் (627,339 ச.கி.மீ.).
**தலைநகரமும் பெரிய நகரமும்:** மொகாடிஷு.
**சனத்தொகை** (2010): 1,01,12,453.
**மொழிகள்:** சோமாலி (உத்தியோகபூர்வ மொழி), அரபு, ஆங்கிலம், இத்தாலி.
**இனக்குழுக்கள்:** சோமாலி 85%, பாண்டு மற்றும் ஏனைய மக்கள் 15% (இதில் 30,000 அராபியர்களும் உள்ளடங்குகின்றனர்)
**சமயம்:** இஸ்லாம் (சுன்னி).
**எழுத்தறிவு:** 38%.
**நாணயம்:** சோமாலி ஷில்லிங்.
**இணையத்தளக் குறியீடு:** .sc
**தொலைபேசிக் குறியீட்டு இலக்கம்:** 252.


**தேசிய கீதம்**

Soomaaliyeey toosoo
Toosoo isku tiirsada ee
Hadba kiina taagdaranee
Taageera waligiinee... என ஆரம்பமாகின்றது.

## வரலாறு

ஏழாம் நூற்றாண்டு முதல் பத்தாம் நூற்றாண்டு வரை அராபிய மற்றும் பாரசீக வணிகர்களின் முக்கிய வர்த்தகத் தளமாக இன்றைய சோமாலியா திகழ்ந்தது. பின்னர் சில காலம் எதியோப்பிய பெருநிலப்பரப்பில் அடங்கிய ஒரு பிரதேசமாகத் திகழ்ந்தது. 16 ஆம் நூற்றாண்டில் வட கரையோரப் பகுதியைத் துருக்கியரும் தென்பகுதியை ஸென்ஸிபார்





சுல்தான்களும் தமது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்தனர். 1839 இல் ஏடன் பிரித்தானியாவின் ஆதிக்கத்தின்கீழ் வந்ததோடு, சோமாலியாவின் கரையோரப் பகுதியும் அவர்களின் ஆதிக்கத்தின்கீழ் வந்தது. 1862 இல் பிரான்ஸ் இங்கு நிலக்கரி சுரங்கங்களை அமைத்தது. ஜிபுட்டி, நாளடைவில் எரித்திரியா மற்றும் இன்றைய சோமாலியாவின் பல பகுதிகள் இத்தாலியின் ஆதிக்கத்தின்கீழ் வந்ததன் பின்னர் 1920 இல் இன்றைய சோமாலியாவின் முழுப் பகுதியும் பிரித்தானிய மற்றும் இத்தாலிய ஆட்சியின்கீழ் வந்தது. இதனையடுத்து,



காப்லே சிதைவுகள்



இத்தாலிய சோமாலியப் பகுதியும் பிரிட்டிஷ் சோமாலியாவும் இணைந்து 1960 இல் சோமாலியக் குடியரசானது.

இதன்பின்னர் இங்கு 1969 தொடக்கம் 1991 வரை இராணுவ ஆட்சி நிலவியது. 1991 இல் ஐக்கிய சோமாலியக் காங்கிரஸ் இராணுவ ஆட்சியை அகற்றியது. 1996 இல்

ஜெனரல் அய்டிட் படைகளுக்கும் இடைக்கால அதிபர் அலி மஹ்தி முகமதின் படைகளுக்குமிடையே கடும் யுத்தத்தில் ஜெனரல் அய்டிட் காலமானார். 2004 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 23 இல் சோமாலிய நாடாளுமன்றம் ஆரம்பிக்கப் பட்டது.

## கலாசாரம்

சோமாலிய கலாசாரமானது பாரம்பரியமும் பண்பாடுகளும் நிறைந்த பழம் பெரும் கலாசாரமாகும். அத்துடன், நாகரிகம் நிறைந்ததும் சிறப்பம்சம் பலவற்றைக் கொண்டதொரு வளமான கலாசாரமாகும். அத்துடன், அண்டைய நாடுகளினதும் தொலைதூர நாடுகளினதும் கலாசாரங்களை உள்வாங்கிக் கொண்டமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

## காலநிலை

பூமத்திய ரேகையில் அமைந்துள்ள சோமாலியா ஓர்




அரைகுறைப் பாலைவனக் காலநிலை நாடாகும். இந்நாட்டில் மத்திய மற்றும் கரையோரச் சமவெளிப் பிரதேசத்திலும் வடக்கு மற்றும் ஏடன் குடா பகுதியிலும் வருடம் முழுவதும் வெப்பமும் உலர் காலநிலையும் நிலவும். டிசம்பர் முதல் பெப்ரவரி வரையிலான பருவ காலங்களில் மட்டும் மிதமான காலநிலை நிலவும். தென்பகுதியில் அதி கூடிய மழை மே முதல் ஒக்டோபர் வரையிலான பருவ காலத்தில் காணப்படும்.

## தொடர்பாடல்

**தொலைபேசிகள்:** பிரதான தொலைபேசிப் பாவனையாளர்கள் 15,000(2000). **வானொலி ஒலிபரப்பு நிலையங்கள்:** AM 0, FM1, சிற்றலைகள் 5 (2001)
**வானொலி:** 4,70,000.
**தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்கள்:** 3 தொலைக்காட்சிப் பெட்டிகள் 1,35,000 (1997). **இணையத்தள வழங்குனர்கள்** (ISPS) 3; இணையத்தள பாவனையாளர்கள் (2000): 200

## போக்குவரத்து

**புகையிரதப் பாதைகள்:** 0 கி.மீற்றர்.
**பெருந்தெருக்கள்:** மொத்தம் 22,100 கி.மீற்றர்



தேசிய இலச்சினை

(இதில் செப்பனிடப்பட்டவை 2,608 கி.மீற்றர், செப்பனிடப்படாதவை 19,492 கி.மீற்றர்)
**துறையும் துறைமுகமும்:** பூஸாசோ, பேர்பெரே, கிஸ்மாயோ, மெர்கா, மொகாடிஷு.
**விமான நிலையங்கள்:** 60(2002).

## பொருளாதாரம்

**விவசாயம்** (பயிர்ச்செய்கை நிலம் 2%) **மற்றும் விலங்கு வேளாண்மை:** வாழை, மரவள்ளி, சோளம், மக்காச்சோளம், தென்னை, நெல், கரும்பு, மாம்பழம், அவரை வகைகள், மாட்டுப் பண்ணை உற்பத்திகள், செம்மறியாடு, ஆடு, மீன்.
**தொழிலாளர் தொகை:** 3.7 மில்லியன்.
**கைத்தொழில்:** சிறிய அளவில் மென் கைத்தொழில்கள். சீனி சுத்திகரிப்பு, புடவை வகைகள், வயரில்லாத் தொடர்புத்துறை.
**இயற்கை வளங்கள்:** யுரேனியம் மற்றும் மூலப் பொருளாக இரும்புருக்கு. **ஏற்றுமதிகள்:** கால்நடை, வாழை, தோற்





சோமாலிய மக்கள்

பொருட்கள், மீன், மென் உலோகம், மரக்கறி வகைகள், **இறக்குமதிகள்:** உற்பத்திப் பொருட்கள், பெற்றோலிய உற்பத்திகள், உணவுப் பொருட்கள், கட்டிடப் பொருட்கள் என்பன. **வர்த்தகப் பங்காளிகள்** (2004): ஐக்கிய அரபு எமிரேட்ஸ், யெமென், ஓமான், ஜிபுட்டி, கென்யா, இந்தியா, பிரேஸில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்திரை வரை சென்ற நம் பண்டைய கால உரிமைகள்





**இலங்கையின் பண்டைய கால உரிமைகளை வெளிப்படுத்தும் நோக்கில் முத்திரைப் பணியகத்தினால் 'பண்டைய கால உரிமைகள்' என்ற பெயரில் முத்திரைத் தொகுதிகள் வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதுவரை இந்த முத்திரைத் தொகுதிகள் நான்கு வெளியிடப்பட்டுள்ளன. இலங்கையின் பண்டைய கால வரலாற்றுக் காலம், பின்னைய வரலாற்றுக்காலம் மற்றும் முன்னைய அனுராதபுரக்காலம், பின்னைய அனுராதபுரக்காலம், பொலனறுவைக்காலம் என்ற தலைப்புகளின்கீழ் இந்த முத்திரைகள் வெளியிடப்பட்டுள்ளன. இதன் முதல் முத்திரைத்தொகுதி 2005 ஆம் ஆண்டு டிசம்பர் 21 ஆம் திகதி வெளியிடப்பட்டது.**

## பண்டைய வரலாற்றுக்காலம்

பண்டைய காலத்தை மூன்றாக வகுப்பர். அதாவது, முன்னைய கற்காலம் (palaeolithic)

மத்தியகற்காலம் (Mesolithic) மற்றும் நவீனகற்காலம் (Neolithic) என்பனவே அவையாகும். ஆதி மனிதர்கள் வாழ்ந்த காலத்தையே 'கற்காலம்' என்பர். ஆதி நவீன மனிதர்கள் வாழ்ந்தகாலம் மத்திய கற்காலமாகும். விவசாயத்தில் ஈடுபட்டு, உலோகப் பாவனைக்குப் பழக்கப்பட்ட மனிதர்கள் வாழ்ந்தகாலம் 'நவீனகற்காலம்' என்று கூறுவர். மேற்கற்காலம், மத்திய கற்காலம், கீழ்கற்காலம் என்று மூன்று உப பிரிவுகளாக கற்காலம் பிரிக்கப்படுகின்றது. இந்த மூன்று காலத்தைப் போன்று முதலில் குறிப்பிடப்பட்ட பிரதான மூன்று காலங்களுக்குரிய பல விடயங்கள் வரலாற்றுச் சான்றுகள் தொல்பொருள் ஆய்வுகளின்மூலம் கிடைத்துள்ளன.

## முதல் மானிட சான்றுகள்

5 ரூபா பெறுமதிகொண்ட இந்த முத்திரையில் ஆதி மனித சான்றுகள் கிடைத்த கல்கந்த பிரதேசத்தின் வரைபடம் மற்றும் அக்காலத்தைச் சேர்ந்த கல்வகைகளும்




உள்ளடக்கப்பட்டுள்ளன. கற்காலத்திற்குரிய சான்றுகள் முதன்முதலில் இரணைமடுப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டன. இந்த சான்றுகளை 'இரணைமடுத் தொகுதி' என்று குறிப்பிடுவர்.

இரணைமடுப் பிரதேசத்தில் கிடைத்த கற்களினாலான ஆயுதங்கள் மிகவும் எளிமையானவை. கஹந்த மற்றும் திருவானா ஆகிய கனிம வகைகளினால் அவை செய்யப்பட்டுள்ளன. இந்த ஆயுதங்கள் இற்றைக்கு ஒரு இலட்சத்து இருபத்தையாயிரம் ஆண்டுகள் வரை பழைமை வாய்ந்தவை என்று தெரியவந்துள்ளது. கல்கந்த பிரதேசத்திலும் 'பந்தல' வனப்பகுதியின் கரையோரமும் அமைந்துள்ள பத்திராஜவெல எனும் பிரதேசத்திலும், இரத்தினபுரி மாணிக்கக்கற்கள் அகழ்விடங்களிலும் இரணைமடுத் தொகுதிக்கு ஒப்பான சான்றுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. இந்த அனைத்துக் கற்களிலான ஆயுதங்களும் ஆதிகாலங்களில் மிருக வேட்டைக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

## இலங்கையில் அழிந்துபோன விலங்குகள்

'பிளயொஸ்ட்டசீன்' காலத்தில் இந்த நாட்டில் வாழ்ந்து தற்போது அழிந்து போய்விட்ட விலங்குகளின் எச்சங்கள், படிமங்கள் இரத்தினபுரி மாணிக்




கக்கற்கள் அகழ்வுப் பிரதேசங்களில் பெருமளவில் கிடைத்துள்ளன. இச்சான்றுகளை வைத்து அன்றைய கால சூழல் பின்னணிகள் பற்றிய விபரங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. இந்த சான்றுகளின்படி, அன்றைய சூழல் பின்னணிகளை அறிந்துகொள்ள முடியும். இதன்படி, ஓவியமாக வரையப்பட்ட அன்றைய சேற்று நிலத்தின் காட்சியும், ரைனோசரஸ் படிமம் ஒன்றும் இந்த முத்திரையில் சித்தரிக்கப்பட்டுள்ளன. முத்திரையின் பெறுமதி 20 ரூபாவாகும். அத்துடன், ஆய்வாளர் ஏ.பி.தெரணியகலவினால் இரத்தினபுரிப் பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்ட படிமமும் ஆராயப்பட்டது.

## 'பட்டதொம்ப' குகையும் பலாங்கொட ஆதி மனிதர்களும்

'பட்டதொம்ப' குகை மற்றும் பலாங்கொட ஆதி மனிதனின் மண்டையோடு காட்சிப்படுத்தப்பட்டுள்ள இந்த முத்திரையின் பெறுமதி 25 ரூபாவாகும். பலாங்கொடை ஆதி மனிதன் (ஹோம்மோசேப்




பியன்ஸ், பலாங்கொடன்ஸிஸ்) மத்திய கற்காலத்திற்குரியவன். 'பலாங்கொட ஆதி மனிதன்' என்று பெயர் சூட்டக் காரணம் இந்த மனிதச் சான்றுகள் முதன்முதலில் பலாங்கொடப் பிரதேசத்தின் பெல்லன்பெதி பெலஸ்ஸவில் கிடைக்கப்பெற்றமையேயாகும். இந்த மனித சான்றுகள் இற்றைக்கு ஆறாயிரத்து ஐநூறு ஆண்டுகள் பழைமை வாய்ந்தவை. பட்டதொம்ப குகை, கித்துல்கல பெலி குகை, கேகாலை சாம்பல் குகை, புளத்சிங்கள பாகியன்கல குகை, இராவணா எல குகை ஆகிய இடங்களில் இருந்தும் பலாங்கொட மனித சான்றுகள் கிடைத்துள்ளன. பலாங்கொட மனிதன் பயன்படுத்திய கல் ஆயுதம் மற்றும் அவை தயாரிக்கப்பட்ட இடம் என்பன இந்த சான்றுக்குள் அடங்கும். இந்த மனிதர்கள் முன்னேற்றகரமான வகையில் கற்கால ஆயுதங்களைப் பயன்படுத்தியுள்ளனர். இவை 'சுத்தமான கற்கால உபகரணங்கள் என்று கூறப்படுகின்றன. தட்டை ஆயுதங்கள், கூராயுதங்கள், தட்டும் ஆயுதங்கள் ஆகிய வடிவங்களில் இந்த ஆயுதங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. மிருக எலும்புகளைக் கூர்மையாக்கி சில ஆயுதங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. பலாங்கொட மனிதர்கள் வாழ்ந்த பிரதேசங்களில் கிடைத்த சான்றுகளின்படி, அவர்களின் உணவுப் பழக்க வழக்கங்கள் பற்றித் தெரிய [illegible] கொட மனிதன் வசித்த குகைகளிலும் இவ்வாறான மண்டையோடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. 'பாகியன்கல்' குகையில் கண்டுபிடிக்கப்பட்ட மருந்து தடவப்பட்ட மண்டையோடு, ஐயாயிரம் ஆண்டுகள் வரை பழைமை வாய்ந்தது எனவும் அவர்கள் சில ஆபரண வகைகளையும் பயன்படுத்தியுள்ளனர் எனவும் கண்டறியப்பட்டுள்ளது.

## புதிய கற்காலத்தில் பயிர்ச்செய்கை

புதிய கற்காலத்தில் வசித்த ஆதி மனிதர்கள் பயிர்ச்செய்கையை மேற்கொண்டதற்கான சான்றுகள் 'ஹோட்டன்' சமவெளியில் மேற்கொள்ளப்பட்ட Pollenanalyis- ஆய்வின் ஊடாக, கண்டறியப்பட்டது. பயிர்ச்செய்கை




தொடர்பான விபரங்கள், காலப்பகுதி என்பன இந்த ஆய்வின் ஊடாகக் கண்டுபிடிக்கப்பட்டன. இதன்படி, புதிய கற்காலத்தில் ஓட்ஸ், பார்லி ஆகிய தானியவகைகள் பயிர் செய்யப்பட்டதாக இந்த ஆய்வின் ஊடாகத் தெரியவந்துள்ளது. இந்த முத்திரையில் 'ஹோட்டன்' சமவெளியில் அக்காலங்களில் காணப்பட்ட பயிர்ச் செய்கையும், பார்லி பயிரும் சித்தரிக்கப்பட்டுள்ளன. முத்திரையின் பெறுமதி 30 ரூபாவாகும்.

(இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## வினாத்தாள் - I


பெயர்: ............................................... நேரம்: 45 நிமிடங்கள்

01 தொடக்கம் 33 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றில் மிகச் சரியான விடையைத் தெரிவு செய்து அதன்கீழ்க் கோடிடுக.

★ 1 ஆம், 2 ஆம் வினாக்களில் உள்ள ஒத்த உருக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்க.

01.



(1) A,B (2) B,D (3) A,D

02.



(1) F,G (2) F,H (3) E,H

03. கவிதையில் உள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

வானம்-கருக்கின்றது
குளிர்காற்று- வீசுகின்றது
இடி-இடிக்கின்றது
மின்னல்-...........................

(1) விழுகின்றது (2) இடிக்கின்றது (3) மின்னுகின்றது

★ *4 ஆம், 5 ஆம் வினாக்களில் முதல் இரு சொற்களுக்கு ஏதோ ஒரு வகையில் தொடர்பு உண்டு. மூன்றாவது சொல்லுக்குப் பொருந்தக்கூடிய நான்காவது சொல்லைத் தெரிவு செய்க.*

04. பசி - உணவு என்பது போல, நோய்- .................

(1) தாதி (2) மருந்து (3) வைத்தியர்


05. கப்பல் - துறைமுகம் என்பது போல, விமானம்-.....................

(1) ஆகாயம் (2) பயணம் (3) விமானநிலையம்

06. தரப்பட்டுள்ள இரு உருக்களையும் ஒன்றன் மீது ஒன்று வைக்கும்போது, கிடைக்கும் உருவைத் தெரிவு செய்க.




07. இரு உருக்களையும் சேர்க்கும் போது, கிடைக்கும் உரு யாது?




08.


குமார் சூரியன் உதிக்கும் திசையை நோக்கி நிற்கின்றான். அவனின் வலதுபக்கம் 1/4 சுற்று திரும்பும் போது எத்திசையைச் சந்திக்கின்றான்?

(1) மேற்கு (2) தெற்கு (3) வடக்கு

★ *ஒவ்வொன்றும் 1 சதுர சென்ரிமீற்றர் பரப்பளவு கொண்ட 20 சதுரங்களை அருகேயுள்ள உரு கொண்டுள்ளது. இதனைப் பயன்படுத்தி 9 ஆம், 10 ஆம் வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்க.*

09. அதில் நிழற்றப்பட்டுள்ள பகுதியின் பரப்பளவு எத்தனை சதுர சென்ரிமீற்றர்?


(1) 12 (2) 10 (3) 8

10. அதில் நிழற்றப்பட்டுள்ள பகுதியின் பரப்பளவு மொத்தப்பரப்பளவின் என்ன பின்னம்?

(1) $\frac{1}{4}$ (2) $\frac{1}{3}$ (3) $\frac{1}{2}$

11. 61 தொடக்கம் 68 வரையுள்ள எண்ணும் எண்களை எழுதும்போது, இலக்கம் 6 எழுதப்படும் தடவைகளின் எண்ணிக்கை யாது?

(1) 8 (2) 9 (3) 10

12.


மாம்பழத்தின் விலை ரூபாய் 20.00 எனின் அன்னாசிப்பழத்தின் விலை யாது?

(1) ரூபாய் 40.00 (2) ரூபாய் 60.00 (3) ரூபாய் 80.00

★ *2011 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் திகதி சனிக்கிழமை ஆகும். இதற்கேற்ப 13ஆம், 14 ஆம் வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்க.*

13. 2011 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் உள்ள சனிக்கிழமைகளின் எண்ணிக்கையும் ஞாயிற்றுக்கிழமைகளின் எண்ணிக்கையும் முறையே;

(1) 5,5 (2) 4,5 (3) 5,4

14. 2011 ஆம் ஆண்டில் 365 நாட்கள் உள்ளன. அந்த ஆண்டில் எத்தனை சனிக்கிழமைகள் உள்ளன?

(1) 54 (2) 53 (3) 52

★ பின்வரும் வாக்கியங்கள் கருத்துள்ளனவாக இருப்பதற்கு செய்ய வேண்டிய மாற்றத்தைத் தெரிவு செய்க.

15. மீன் குஞ்சுகள் கடல் நீரில் பறந்து செல்கின்றன.

(1) கடல் நீர் என்பதற்குப் பதிலாக நன்னீரில் என்பதை இடுதல்.
(2) பறந்து என்பதற்குப் பதிலாக நீந்தி என்பதை இடுதல்.
(3) மீன் குஞ்சுகள் என்பதற்குப் பதிலாக கடலாமை என்பதை இடுதல்.

16. பேரூந்து (பஸ்) தண்டவாளத்தில் செல்கிறது.

(1) பேரூந்து என்பதற்குப் பதிலாக கார் என்பதை இடுதல்.
(2) தண்டவாளம் என்பதற்குப் பதிலாக இரும்புப்பாதை என்பதை இடுதல்.
(3) பேரூந்து என்பதற்குப் பதிலாக புகையிரதம் என்பதை இடுதல்.

17. 6 ▲ 3 = 24 ● 6 என்னும் கணிதச் செய்கையில் ▲, ● என்னும் இடங்களுக்குப் பொருத்தமான கணிதக் குறியீடுகளைத் தெரிவு செய்க.

(1) X ,+ (2) X ,- (3) + , ÷

18. கஜன் பாடசாலையில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியின்போது, 100m ஓட்ட நிகழ்ச்சியில் நல்ல பயிற்சி பெற்றும், அவனால் அந்த நிகழ்ச்சியில் வெற்றி பெற முடியவில்லை. இதற்கான காரணமாக அமையக்கூடியது;


(1) உணவு உண்ணாமல் பங்கு பற்றியமை
(2) விளையாட்டு மைதானம் வேறுபட்டமை
(3) கஜனை விட வேகமாக ஓடக்கூடியவர்கள் இருந்தமை

★ *19, 20 ஆம் வினாக்களில் முதற்கூட்டில் உள்ள இரண்டு எண்களுக்கும் பதிலாக சரியான எண்ணைக் கொண்ட கூட்டைத் தெரிவு செய்க*

19. [20x2] + 50 = 90 (1) [20 ÷ 2] (2) [8x5] (3) [40-10]

20. [60 ÷ 2] + 40 = 70 (1) [15x3] (2) [30÷2] (3) [50-20]


21. பின்வரும் எந்தப் பொருட்சோடி மேலிருந்து பார்க்கும்போது ◎ ⊙- எனத் தோன்றும்?




22. ஒரு வீதியில் இரு மின்கம்பங்களுக்கிடையே 3 கொடிகள் வீதம் தொங்க விட்டு அவ்வீதியை அலங்கரிக்கத் தீர்மானிக்கப்பட்டது. வீதியில் 9 மின்கம்பங்கள் இருந்தால் அவற்றுக்கிடையே தொங்குவதற்கு எத்தனை கொடிகள் தேவை?

(1) 27 (2) 24 (3) 12

★ *23, 24 ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள எண்கோலங்களை அவதானித்து வெற்றிடத்திற்கு பொருத்தமான எண்ணைத் தெரிவு செய்க.*

23.



(1) 8
(2) 16
(3) 2

24.




(1) 72
(2) 20
(3) 108

மிகுதி அடுத்த இதழில் வெளிவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘திமில்’ கொண்ட டைனோசர்



**டைனோசர் குறித்து அதீத அக்கறை காட்டுவோருக்கு மிக முக்கியமான செய்தி ஒன்று வெளியாகியுள்ளது. அதாவது, புதிதானதும் வியப்பைத் தரக்கூடியதுமான டைனோசர்கள் இரண்டின் எலும்பு எச்சங்கள் கிடைத்துள்ளதே இந்த முக்கியமான செய்தியாகும்**

ஸ்பெயின் நாட்டு படிம ஆராய்ச்சியாளர்களுக்குக் கிடைத்துள்ள இந்தப் புதிய வகை டைனோசர்கள் ஏனைய டைனோசர்களைப் போன்றதல்ல; இவற்றின் முதுகுப்புறத்தில் பெரிய திமில் ஒன்று உள்ளது. நாம் நன்கறிந்துள்ள டைரனசோரஸ் ரெக்ஸ், வெலோ சிரப்டர் ஆகிய தாவர உண்ணியான டைனோசர்களின் முன்னோராக இந்த திமில் டைனோசரைக் குறிப்பிட முடியும் என்று விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

## மாமிச உண்ணி

லஸ்ஹோயாஸ் என்ற புதைபொருள் ஆய்வுப் பிரதேசத்தில் இருந்தே ஆராய்ச்சியாளர்களால் இந்த வியத்தகு டைனோசரின் எலும்பு எச்சங்களைப் பெற்றுக்கொள்ள முடிந்துள்ளது. இந்த லஸ் ஹோயாஸ் புதைபொருள் ஆய்வுப் பிரதேசம் ஸ்பெயினின் குசென்கா எனும் பகுதியில் உள்ளது. இந்தப் பிரதேசமானது டைனோசர்களின் எச்சங்களைத் தேடிச் செல்லும் ஆராய்ச்சியாளர்களுக்கும் ஆர்வலர்களுக்கும் மிகவும் பயன்மிக்க ஓர் இடமாகவே கருதப்படுகின்றது.

இந்தப் புதிய வகை டைனோசருக்கு கொன்காவெனேடர் கோகவேட்டஸ் (Concavenator Corcovatus) என்று பெயரிடப்பட்டுள்ளது. குன்கா என்பது வேட்டைக்காரன் (Cuenca ventor) என்று பொருள்படும். கோகவேட்டஸ் என்பது திமிலாகும். கீழ் ‘க்ரிடைசியா’ காலப்பகுதியில் அதாவது, இற்றைக்கு 120-150 மில்லியன் வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்த டைனோசர்களின் படிம எச்சங்களின் சான்றாக, லஸ் ஹோயாஸ் புதைபொருள் ஆய்வு பிரதேசத்தில் கிடைத்த எச்சங்கள் இருப்பதாக விஞ்ஞானிகள் குறிப்பிடுகின்றனர். புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள இந்த டைனோசர்களின் எலும்புகள் வியப்பூட்டும் வகையில் நன்கு பாதுகாப்பாக உள்ளதாக மட்ரிட் நகர பல்கலைக்கழகத்தின் புதைபொருள் ஆய்வு விஞ்ஞானி பெர்ணான்டோ எஸ்காசோ குறிப்பிடுகின்றார்.

“இது ஓர் அபூர்வமான புதிய கண்டுபிடிப்பாகும். இந்த டைனோசர் இதற்கு முன்பு என்றுமே கண்டுபிடிக்கப்படாத பின்னங்கால்களினால் நடந்து செல்லக்கூடிய மாமிச உண்ணி டைனோசராகும். ஐபீரிய வளைகுடாவில் கிடைத்த முழுமையான டைனோசர் எலும்புத் தொகுதி என்றும் இதனைக் கூற முடியும்” என்று எஸ்காசோ தெளிவுபடுத்துகின்றார்.

**இந்த டைனோசர்களின் எலும்புகள் வியப்பூட்டும் வகையில் நன்கு பாதுகாப்பாக உள்ளதாக மட்ரிட் நகர பல்கலைக்கழகத்தின் புதைபொருள் ஆய்வு விஞ்ஞானி பெர்ணான்டோ எஸ்காசோ குறிப்பிடுகின்றார்**

## திமில் கொண்ட டைனோசர்

இது மூக்கு நுனி முதல் வாலின் முடிவு வரை 6 மீற்றர் (20 அடி) நீளம் கொண்டது. விசாலமான மாமிச உண்ணி டைனோசராக இது கருதப்படுகின்றது. ‘காச்சோரோ பொன்டோ சோரியா டைனோசர்களின் முதல் வித்தாக இந்த திமில் கொண்ட டைனோசர் கருதப்படுகின்றது. இந்த இன டைனோசர்கள் பண்டைய காலத்தில் தென்பகுதிக் கண்டங்களில் வசித்து வந்ததாகக் கூறப்படுகின்றது.


## தெளிவான விளக்கம்

இரண்டு கால்களினால் நடந்து திரிந்த டைனோசர்கள் ரொமேனியாவில் இருந்துள்ளன. டைனோசர் காலப் பகுதி முடிவடைந்தபோது, தற்போதைய ஐரோப்பாவுக்குரிய பிரதேசங்களில் இற்றைக்குப் பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்து வந்த டைனோசர்கள் குறித்துத் தெளிவான விளக்கத்தினைப் பெற இந்தக் கண்டுபிடிப்பு டைனோசர் பற்றிய ஆய்வாளர்களுக்கு உதவியுள்ளது.

## தனித்துவமான இயல்புகள்

இந்த டைனோசர்களுக்கு பெலோர் பொன்டிக் அல்லது ஸ்டோக்கி ட்ரகன் என்று பெயரிடப்பட்டுள்ளது. ‘ஸ்டோக்கி ட்ரகன்’ என்பது ‘உடற்பருமன் கொண்ட ட்ரகன்கள்’ என்று பொருள்படும். மிகவும் பெரிய டைனோசருக்குரிய தனித்துவமான 20 இயல்புகள் இதற்கு உள்ளதாக அமெரிக்க இயற்கை வரலாற்று விஞ்ஞான அருங்காட்சியகத்தின் விஞ்ஞான ஆய்வுப் பிரிவின் பிரதம அதிகாரி மார்க் நொரெல் என்பவர் கூறுகின்றார்.

“நாம் இவ்வாறான கண்டுபிடிப்புக் குறித்து ஆர்வத்துடன் எதிர்பார்த்திருந்தோம். தற்போது அச்சந்தர்ப்பம் கிடைத்துள்ளது” என்று நொரெல் மேலும் குறிப்பிடுகின்றார். இதன் நீண்ட வால் 1.8 மீற்றர் முதல் 2.1 மீற்றர் நீளம் வரை இருக்கும் என்றே ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.



ரொமேனியாக பருமனான ட்ரகன்

(இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறுத்தற் குறியீடுகளை





நிறுத்தற் குறியீடுகள் என்பது 'இடைவேளை' என்றும் பொருள் கொள்ளப்படும். சொல் வரிசையானது நிறுத்தற் குறியீடுகளினால் அலங்கரிக்கப்படுகின்றன. ஒரு பந்தியில் வரும் பலதரப்பட்ட வாக்கியங்களை வாசிக்கும்போது, இடைவெளி (இடைவேளை) விட்டு தேவையான இடங்களில் நிறுத்திப் பொறுமையான அர்த்தத்துடன் வாசிக்கும்போது, அவ்வாசிப்பு முழுமையடைந்து திருப்தி அளிக்கின்றது. வாக்கியங்களில் சரியான முறையில் நிறுத்தற் குறியீடுகளைப் பயன்படுத்தாவிடின் அவ்வாக்கியங்களின் உண்மையான கருத்தினை விளங்கிக்கொள்வது கடினமாகும். அதேநேரம் அவ்வாக்கியத்தின் அர்த்தமும் மாறிவிடக்கூடும். ஆச்சரியம், கேள்வி, சற்று நிறுத்தி வாசித்தல் போன்ற விடயங்கள் வாக்கியங்களில் இருக்கக்கூடும். இவற்றை அடையாளப்படுத்தும் குறியீடுகளையே நாம் 'நிறுத்தற் குறியீடுகள்' என்று கூறுகின்றோம். இந்த நிறுத்தற் குறியீடுகள் ஆங்கில மொழிப் பயன்பாட்டில் இருந்து வந்தவையாகும்

## நாம் பயன்படுத்தும் நிறுத்தற் குறியீடுகள்

| | |
|---|---|
| . | முற்றுப்புள்ளி |
| : | முக்காற்புள்ளி |
| , | காற்புள்ளி |
| ; | அரைப்புள்ளி |
| ? | கேள்விக்குறி |
| ! | ஆச்சரியக்குறி/வியப்புக்குறி |
| " " | மேற்கோள் குறி |
| ( ) | அடைப்புக்குறி |
| { } | சோடி அடைப்புக்குறி |
| ...... | தொடர் புள்ளி |
| - | இடைக்குறி (கோடு) |
| _ | நீள்கோடு |
| ' | தனி மேற்கோள்குறி |
| ... | மூன்று முற்றுப்புள்ளிகள் |
| ...... | முற்றுப்புள்ளி வரிசைகள் |
| / | சரிவுக்கோடு |
| ^ | செருகல் கோடு |

## முற்றுப்புள்ளி (.)

வாக்கியத்தின் முடிவினைக் குறிக்க முற்றுப்புள்ளி பயன்படுகின்றது.

உதாரணம்: நான் வீட்டிற்குச் சென்று விட்டேன்.

இதேபோல் நபர்களின் பெயர்களின் முதல் எழுத்துக்களின் பின்னரும் முற்றுப்புள்ளி இடப்படும்.

உதாரணம்: ஆர்.எஸ்.வாசன்

அந்தவகையில், ஒரு பெயரை சுருக்கிக் கூறவும் முற்றுப்புள்ளி உதவும்.

உதாரணம்: (இ.போ.ச. இலங்கை போக்குவரத்து சபை)

ரூ.30/= தசம தானத்தினைக் குறிப்பிடவும் இது பயன்படும். (இங்கு முற்றுப்புள்ளி சற்று உயரத்தில் எழுதப்படும். உதாரணம்: 1.125

## அரைப்புள்ளி (;)

ஒரே வகையான வாக்கியங்கள் சிலவற்றை வகுத்துக் காட்ட இது பயன்படுத்தப்படும்.

உதாரணம்: விசேட விருந்தினர்கள் மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கியிருந்தனர்; நடிகர்கள் நடித்து மகிழ்ந்தனர்; மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்; விடைபெற்றனர்.

## முக்காற் புள்ளி (:)

உதாரணம் காட்ட, விபரம் தெரிவிக்க, இந்த அடையாளம் பயன்படுகிறது.

உதாரணமாக: மணித்தியாலம் மற்றும் வினாடியினை இலக்கத்தில் எழுதும்போது பயன்படும்.


உதாரணம்: கூட்டம் மாலை 6:30 க்கு ஆரம்பமாயிற்று.

கணிதத்தில் விகிதத்தினைக் காட்டவும் இது பயன்படுகின்றது.

உதாரணம்: அப்பணம் அவர்கள் இருவருக்கிடையில் 2:3 என்ற விகிதத்தில் பகிரப்பட்டது.


## இடைக்குறி அல்லது கோடு (-)

சொற்களை இணைத்துக் கூறும்போது அதன் வேறுபாட்டினை உணர்த்தப் பயன்படும்.





உதாரணம்: சமூக -அரசியல் நிறுவனங்கள், பல்லின-இரசாயன வேறுபாடு, கேட்கும்-பார்க்கும் ஊடகம். அத்துடன், கால அளவினைக் குறிப்பிடவும் பயன்படும்.

உதாரணம்: மகா பராக்கிரமபாகு அரசனின் காலம். கி:பி 1153-86




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரிந்துகொள்வோம்!




என்று அறியப்படுகின்றது. வாக்கியம் ஒன்றை வரிசையாக எழுதும்போது, இடம் போதாத நிலையில் அதனை அடுத்த வரிசையில் எழுதமுன்னர் வாக்கியத்தின் தொடர்பை உணர்த்துவதற்கும் இந்த அடையாளம் பயன்படும்.

## காற்புள்ளி (,)

வாக்கியத்தின் பகுதிகளுக்கிடையிலான ஒருசில நிறுத்தத்தினை வெளிப்படுத்த இந்த அடையாளம் பயன்படுத்தப்படுகின்றது.

உதாரணம்: பிள்ளைகள் பாடசாலைக்குச் சென்று, சற்று விளையாடிவிட்டு, வகுப்பறைக்குச் சென்றனர்.

பிரதான வாக்கியத்திற்கான உப சொற்களை வேறுபடுத்தப் பயன்படும்.

உதாரணம்:
அலங்கரிக்கப்பட்ட சுவர்கள், கதவுகள், ஜன்னல்கள் பல்வேறு இடங்களில் இருந்தன.

அத்துடன், பெயர்களை வேறுபடுத்தவும் இது உதவுகின்றது.

நெல்லி, இஞ்சி, பூண்டு, வெங்காயம்.

## மேற்கோள் குறியீடு (‘ ’)

இது இரட்டை மேற்கோள் குறி பயன்பாட்டுக்கு ஒப்பானது. ஒரு விசேட வாக்கியத்திற்குள் வரும் விசேட வாக்கியத்தினைக் குறிக்கப் பயன்படும்.
உதாரணம்: ''நியூட்டன் ‘பெருங்கடலில் நீந்திச் செல்வது போன்று' கஷ்டங்களைக் கடந்தார்'' என்று நூலில் குறிப்பிடப்படுகின்றது.










## இரட்டை மேற்கோள் குறியீடு (“ ”)

ஒருவரின் கருத்தினை (உரையாடலை வேறுபடுத்திக் காட்ட இது பயன்படும்.

உதாரணம்: ''இன்று நான் வீட்டிற்குப் போகிறேன்''

## தனி மேற்கோள் குறியீடு (’)

வாக்கியத்தின் ஒலி வேறுபாட்டினை வேறுபடுத்திக் காட்ட இந்தக் குறியீடு பயன்படும்.

(உதாரணம்: தன்ப'ஜிபா (Thunbergia), ப'லின் (Berlin)

## நீள் கோடு (--)

ஒரு வாக்கியத்தின் வெளிப்பாட்டினை வேறுபடுத்தி காட்ட நீள்கோடு பயன்படும்.

உதாரணம்: விசேட விருந்தினர்கள் கண்காட்சிக்கூடத்திற்கு-கலா பவனத்தில் உள்ள மேற்கு அரங்குக்குள் பிரவேசித்தனர்.

## முற்றுப்புள்ளி வரிசைகள் (......)

* மூன்று முற்றுப்புள்ளிகள் (...)
இக்குறியீடானது வாக்கியத்தின் நடுவில் அல்லது முதலில் வரும்.

உதாரணம்: .... வந்து சென்றாள்.

வாக்கியத்தின் இடைவேளையைக் (இடைவெளியை) காட்டவும் இது பயன்படும்.

உதாரணம்: கொழும்பிலிருந்து கண்டிக்கு தூரம் .... கி.மீ.

மேலும் கருத்தினைத் தெளிவு படுத்திக் காட்டவும் உதவும்.

உதாரணம்: இருள் ... தனி ஒருவன் ..... அலறும் குரல்.

## கேள்விக்குறி (?)

ஒரு வாக்கியத்தினைக் கேள்வியாக்க இக்குறியீடு பயன்படுகின்றது. உதாரணம்: மகன் வீடு சென்றானா? அத்துடன், சந்தேகத்தை வெளிக்காட்டவும் இக்குறியீடு உதவுகின்றது.

## ஆச்சரியக் குறி (!)

ஆச்சரியம், ஆசிர்வாதம், பிரார்த்தனை, அழைப்பு, ஆணை, சோகம் என்பனவற்றை இது வெளிப்படுத்தும்.

உதாரணம்: உங்களுக்கு மங்களம் உண்டாகட்டும்!

## சரிவுக் கோடு (/)

மாற்றும் சொல்லைக் காட்ட இக்குறியீடு உதவும்.

உதாரணம்: சாப்பாட்டிற்கு முன்/பின் எடுக்கவும்.

## செருகல் குறியீடு (^)

விடுபட்ட சொல்லை அல்லது எழுத்தை சுட்டிக்காட்ட குறித்துக்காட்ட உதவும்.

உதாரணம் விம^ல^ன் நல்ல பிள்ளை.

## அடைப்புக்குறி ( )


ஒரு வாக்கியத்தின் அர்த் தத்தை தெளிவுபடுத்த உதவும்.

உதாரணம்: அவர் இசையில் (கர்நாடகம்) வித்தகர்.


## சோடி அடைப்பு { }

வாக்கியத்தில் அடைப்புக் குறிக்குள் இன்னுமொரு அடைப்புக்குறி இடவேண்டி ஏற்பட்டால், பிரதான அடைப் புக்குறியாக இந்த சோடி அடைப் புக்குறி பயன்படுத்தப்படும்.

உதாரணம்: {கடந்த மாதம் என்று அவர் குறிப்பிட்டது டிசம்பர் (December) மாதத்தையாகும்}




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பேச்சும் செயலும்

நாளைக்கு பேச்சுப் போட்டிக்கு என்ன தலைப்பு என்று கேட்டான் சண்முகம். "ஆங்.....திக்.....திக்.... திக்குவாயுடன் பே.....பேச்சுப் போட்டியில் கலந்து கொள்வது எப்படி? இதுதாண்டா தலைப்பு" என்று கிண்டலாகச் சொன்னான்-ரகு. கேட்டுக் கொண்டிருந்த அவன் வகுப்பு மாணவர்கள் அனைவரும் சிரிக்க சண்முகத்திற்கு மிகவும் அவமானமாக இருந்தது.

சண்முகத்திற்கு இலேசான திக்குவாய். அதை நினைத்தே அவன் பேச்சு, பாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ளமாட்டான். ஆனால், இதற்கு நேர்மாறானவன் ரகு. சுற்று வட்டாரத்தில் எங்கு பேச்சுப் போட்டி நடந்தாலும் பாடசாலை சார்பில் கலந்துகொள்வான். எதிர்பார்த்தபடியே முதல் பரிசையும் வென்று வருவான். ஆனால், அவனிடம் தான் என்ற ஆணவமும் மற்றவரை மட்டம் தட்டும் தீய குணமும் அதிகம்.

அடுத்த நாள் காலை உள்ளூர் பாடசாலை மாணவ, மாணவிகள் கலந்துகொண்ட பேச்சுப் போட்டி. தலைப்பு: 'தண்ணீர் சிக்கனத்தில் மாணவர்களின் பங்களிப்பு' வகுப்பு வாரியாக நடந்த போட்டியில் 11 ஆம் வகுப்பில் ரகுவே சிறப்பாகப் பேசினான். வழக்கம் போல் அவன் முதலாம் பரிசுக்குத் தெரிவானான். அவன் வகுப்பு மாணவர்கள் அவனை 'ஆஹா ஓஹோ'வெனப் புகழ்ந்தனர்.

மாலையில் பரிசளிப்பு விழா பாடசாலையே களைக்கட்டி இருந்தது. பலரும் பேசியபின் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட பிரபல எழுத்தாளர் கோதண்டம், போட்டியில் வென்றவர்களுக்குப் பரிசுகள் வழங்க அழைக்கப்பட்டார். முதலாம் வகுப்பு முதல் பதினோராம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கியபின் அவர் பேசத் தொடங்கினார்.

"வழக்கமாக அரசியல்வாதிகள்தான் பேசுவது ஒன்று செய்வது ஒன்று என்பார்கள். ஆனால், அப்பழக்கம் இப்போது மாணவர்களிடையேயும் வந்துவிட்டது. இது வருத்தமளிக்கிறது. விழாவில் கலந்துகொள்ள நான் மதியமே வந்துவிட்டேன். அப்போது பாடசாலை குடிதண்ணீர் குழாயில் தண்ணீர் வீணாக வழிந்து கொண்டிருந்தது. அவ்வழியே நான்கைந்து மாணவர்கள் சென்றனர். அவர்கள் குழாயை மூடுகிறார்களா? என்று நான் அவதானித்துக்கொண்டிருந்தேன். ஆனால், அவர்களில் ஒரு மாணவன் மூடியிருந்த மற்றைய குழாய்களையும் திறந்துவிட்டான். கிண்டலாகச் சிரித்தபடி அவர்கள் அங்கிருந்து சென்றனர். இதைப் பார்த்த எனக்கு மிகுந்த அதிர்ச்சி. குழாய்களை மூட நான் சென்றபோது எனக்கு முன்னே அங்கு வந்த ஒரு மாணவன் தண்ணீர் வீணாவதைக் கண்டு அக்குழாய்களை மூடினான் எனக்கு மகிழ்ச்சி. அவனை அழைத்துப் பேசினேன். அந்த மாணவன் யார் என்று அறிய நீங்கள் ஆவலாயிருப்பீர்கள்.... பதினோராம் வகுப்பு மாணவன் சண்முகம் தான் அவர், அவரை மேடைக்கு அழைக்கிறேன்" என்றார். சண்முகம் மேடைக்கு வந்தான்.

"இங்கே வாங்க தம்பி!" என்று அழைத்து கோதண்டம் அவனுக்கு கை கொடுத்தார். "இந்த மாணவரின் பொறுப்புணர்வைக் கண்டு பூரிப்படைகிறேன். எனது அன்பளிப்பாக இவருக்கு இந்தப் பேனாவை வழங்குகிறேன். என்று கூறி அழகிய பேனாவொன்றை சண்முகத்துக்கு பரிசாக வழங்கினார்.

கைதட்டல் பாடசாலை வளாகத்தையே அதிர வைத்தது.

"சரி... ஏற்கனவே தண்ணீர் வீணாக வழிந்து கொண்டிருக்க மேலும் குழாய்களைத் திறந்து வீணாக்கிய மாணவர் யார் என அறிய நீங்கள் நினைக்கலாம். தான் அவரைக் காட்டப் போவதில்லை. அவர் பேச்சில் வல்லவர். இந்த விழாவில் கூட பரிசு பெற்றுள்ளார். மாணவர்களுக்கு தண்ணீர் சிக்கனத்தில் மாணவரின் பங்களிப்பு என்னவென்பதை செயலில் காட்டிய சண்முகமே உண்மையில் இப்பரிசுக்கு உரித்தானவன். இத்தகைய மாணவர்களே நாட்டின் வருங்கால நம்பிக்கை தூண்கள்" என்றார். மீண்டும் கைத்தட்டல். ரகு மட்டும் வெட்கத்தினால் தலை குனிந்திருந்தான்.

A.S.S. நஸீலா,
ப/பேராஹாகும்புர மு.வி.,
வெலிமட

# வாசிப்பே நம் உயிர்நாடி

நமது அறிவை வளர்க்கும் பல துறைகளில் வாசிப்பு மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றது. வாசிப்பானது எமது வெறும் பொழுது போக்குடன் மாத்திரம் நின்றுவிடாமல் அறிவு, ஒழுக்கம், அனுபவம், பண்பாடு, கலாசாரம், நன்னடத்தை, எழுத்தாற்றல் போன்ற இன்னோரன்ன விடயங்களின் அத்திவாரமாகவும் திகழ்கின்றது. இதனால்தான், 'நல்ல நூல்கள் நல்ல நண்பர்கள்' என்று சான்றோர் பலர் நவின்றுள்ளனர்.

ஒருவன் சக்தியுள்ள உணவை மட்டும் உண்டு உடலைப் பெருக்கச் செய்தால் அது பூரண வளர்ச்சி என்று கூற முடியாது. மாறாக, உடலுக்கு கவர்ச்சியையும், உள்ளத்துக்கு ஒளியையும் கொடுக்கும் அறிவு அங்கே காணப்பட வேண்டும். அவ்வறிவு காணப்பட்டால் தான் அவனுடைய மூளையும் உள்ளமும் ஒருமித்து வளர்ச்சி பெறும். எனவே, இவ்வாறான பரிபூரண கல்வி வளர்ச்சிக்கு உதவுவது வாசிப்பேயாகும்.



இன்று பெரும்பாலானோர் மூளைக்கு வேலை கொடுப்பதற்குப் பதிலாக கணிப்பான், கணினி போன்ற தொழில்நுட்ப சாதனங்களில் தங்கி வாழ்கின்றனர். அவை இல்லாவிட்டால் வாழ்வே இல்லை என்ற நிலையே தற்போது காணப்படுகின்றது. இது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

அண்மையில் வாசிப்பின் பிரயோசனம் பற்றிய ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் முடிவு வெளியிடப்பட்டது. அதில், வாசிக்கும் பழக்கமுடையோரின் மூளையானது, ஏனையோரின் மூளையை விட, 18 மடங்கு விரைவாக இயங்குகிறது. மேலும், இவ்வாறு தொடர்ந்து வாசிக்கும்போது இரத்த ஓட்டம் சீராக நடைபெறுவதுடன், இப்பண்புள்ளவர்கள் எந்தவொரு விடயத்தையும் விரைவாகக் கிரகிக்கக் கூடியவராகவும் காணப்படுகின்றார்கள் என்று வியக்கத்தக்க முடிவு வெளியிடப்பட்டுள்ளது. இ[...] ஆய்வின் பிற்பாடுதான் அனேகமான நாடுகளிலுள்ள கல்வி நிலையங்களில் பற்பல வாசிப்புத்துறை சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நமக்குத் தெரியும் உலகப் பிரசித்தி பெற்ற விஞ்ஞானிகளான தோமஸ் அல்லா எடிசன், அல்பட் ஐன்ஸ்டீன், ஐசக் நியூட்டன் போன்றோரையும் அமெரிக்க வரல்லரசின் முன்னாள் அதிபர் ஆப்ரகாம் லிங்கன் போன்ற எண்ணிலடங்கா அறிஞர்களையும் உருவாக்கிய பெருமை இவ்வாசிப்பையே சாரும். இந்த நிதர்சன உண்மைகளை அவ்வறிஞர்களின் வாழ்க்கை வரலாறுகளை கற்பதன் மூலம் அறிந்து கொள்ள முடியும்.

எனவே, வாசிப்பு என்பது அறிவாற்றலின் அடிப்படையாகும். நாமும் வாசிப்பின்மூலம் சிறந்த பயனை அடைவோமாக.

எஸ்.கே.ரிஸ்கான்
குருணாகலை

## நெல்சன் மண்டேலா



சிறந்த எழுத்தாளரான இவர் 'என் வாழ்க்கைப் போராட்டம்' (The struggle of my life) எனும் பிரசித்தி பெற்ற சுயசரிதை நூலை எழுதினார். இவர் மகாத்மா காந்தியிடம் பெரு மதிப்புக் கொண்டு அவர் குறித்த அதிகமான புத்தகங்களைப் படித்துள்ளார். இவர் அமைதிக்கான 'நோபல்' பரிசைப் பெற்றுள்ளார். இவர் தனது வாழ்நாளில் 27 வருடங்களைச் சிறையில் கழித்துள்ளார்.

## வின்சன்ட் சேர்ச்சில்



இவர் 1874 ஆம் ஆண்டு நவம்பர் 30 இல் பிறந்தார். இவரது தந்தை பிரித்தானிய நாட்டைச் சேர்ந்தவர். இவரின் தாயார் அமெரிக்காவைச் சேர்ந்தவர். இவர் பள்ளிப் படிப்புப் பிடிக்காததால் இராணுவத்தில் சேர்ந்தார். சேர்ச்சில் மிகச் சிறந்த ஆங்கிலப் பேச்சுவன்மை கொண்டவர். இவர் இங்கிலாந்தின் பிரதமராக இருந்தபோது ஹிட்லர் தோல்வியுற்றார். அத்துடன் "மார்னிங் போஸ்ட்" எனும் இதழின் போர் நிருபராகப் பணிபுரிந்தார். 'இரண்டாம் உலகப் போரின் நினைவுக்குறிப்புகள்' எனும் பிரசித்தி பெற்ற நூலை எழுதியதுடன் இவர் இலக்கியத்திற்கான நோபல் பரிசைப் பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது,

என்.எப்.அம்மா, கமு/அல்-ஹம்றா வித்தியாலயம்., மருதமுனை.






## வாழ்வு வளம்பெறட்டும்

பூவைப் போல மென்மையான
புதுமைமிகு மாணவர்களே
அறிவுமிகு ஆற்றல்மிகு
அன்புமிகு மாணவர்களே

கல்வி எனும் மகுடத்தினில்
கண்ணும் கருத்துமாய்
வாழ்வினில் எளிமையுடன்
வாழ்ந்து காட்டுங்கள்

மென்மையான பூவில் வரும்
வெண்மையான நீர் துளி போல்
உங்களால் மக்கள் வாழ்வு
நன்கு செழிக்கட்டும்

ரா.சுடரொளி
தரம்-10, வவுனியா.



## இரவுக்காட்சி

ஆதவன் கடலில் மூழ்கவே
வானில் வந்தது வெண்மதி
அந்திமலர்கள் மலரவே
அசைத்தன கண்களை விண்மீன்கள்!
மெல்லன வெளவால் கூட்டமும்
மொத்தமாய் பறந்தன வானிலே
அசைந்தாடும் சோலைதனில்
வளைந்தாடும் தென்னையில்
சில்லென்னும் சில் வண்டின்
ஓசையிலே என்மனம்
மிக மிக மகிழ்ந்ததுவே!
கண்ணைப்பறிக்கும் மின்மினிகள்
என்னைச் சுற்றி வட்டமிடக்
கண்ணைப் பறித்த இரவுக்காட்சி
இனிதே மனதில் நிறைந்ததுவே!

V. தனுஷிகா குமாரி,
க/இராஜவலை இந்து தேசிய கல்லூரி., திகன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதிக்கான கலை வடிவங்கள் இளம் கலைஞரின் கற்பனை முயற்சி



கடற்பொருட்களான பழைமைமிகு சங்கு வகைகள், சிப்பிகள், முருகைக் கற்கள், கடல் வாழ் உயிரினங்களின் ஓடுகள் மற்றும் காட்டுப் பகுதிகளில் அலைந்து திரிந்து பெற்ற மரக்கிளைகள், வேர்கள் என்பனவற்றைக் கொண்டு அமைதியான வாழ்வுக்கான கலைப் படைப்புக்களை இளம் ஓவியரான நளீம் லதீப் என்பவர் உருவாக்கியுள்ளார். சாய்ந் தமருதைச் சேர்ந்த இவரின் புனைபெயர் 'வெள்ளைக்கொடி' என்பதாகும்.

இவர் மேற்படி தனது சுய முயற்சி பற்றிக் கூறுகையில்;

''எனது சிறு வயதிலிருந்தே ஓவியம் வரைவதில் அதீத ஆர்வமிருந்தது. எனக்கு கலை உணர்வென்பது பலதரப் பட்ட விடயங்களின் மூலம் ஏற்பட்டது. இக் கலைப் பொருட்களை உருவாக்க கடற்பொருட்களான மிகவும் பழைமை யான சங்குகள், சிப்பிகள், முருகைக் கற்கள், கடல் வாழ் உயிரினங்களின் ஓடுகள் போன்றவற்றை ஆர்வத்துடன் சேகரித்து வந்தேன்'' என்று கூறுகின் றார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

''சம்மாந்துறைப் பகுதியில் மலை, காட்டுப் பகுதிகளில் அலைந்து திரிந்து என் மனதைக் கவர்ந்த மரக்கிளைகள், வேர்கள் என்பனவற்றை வெட்டி எடுத்தேன், சேகரித்து வைத்துள்ள பொருட்களுக்குப் பொருந்தும் மணிகள், ரிப்பன்கள், அலங்காரப் பொருட்கள் என்பனவற்றையும் அவற்றை



ஒட்டுவதற்குத் தேவையான விசேட பசை வகை களையும் கடைகளில் வாங்கினேன். இவற்றைப் பயன்படுத்தி இரண்டு வருட கால முயற்சியில் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட கலைப்-பொருட் களை எனது கற்பனைக்கு ஏற்ற வகையில் உருவாக்கி இக்கலைப் பொருட்களைக் கொண்டு சாய்ந்தமருது அல்ஹிலால் வித்தியாலயத்தில் கலைக் கண்காட்சியொன்றையும் நடத்தினேன்''.



நளீம் லதீப்



எனது படைப்பு களில் சமாதா னத்தை மையமா கக் கொண்ட பல படைப்புக்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. வன்முறை, அநியாயம், கொடுமை, சிறுவர் துஷ்பிரயோகம், எய்ட்ஸ், மனிதக் கொடுமை, என பல்வேறு தொனிப் பொருட்களில் பல்வேறு செய்திகளையும் கருத்துக்களையும் பொது மக்களுக்குச் சொல்ல முயன் றிருக்கின்றேன். இப்பொருட் களில் எவற்றை யும் நான் விற்க விரும்பவில்லை. எனினும், சிலர் சில பொருட் களை வற்பு றுத்தி வாங்கிச் சென்றுள்ளனர். சுமார் பத்தாயி ரத்திற்கு மேற் பட்ட மக்கள் என் கலைப்பொருட்களைப் பார்வையிட்டு என்னைப் பாராட்டியது எனக்கு மிகுந்த உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது. விரைவில் சம்மாந்துறையிலும் ஒரு கண்காட்சியை நடத்தத் திட்டமிட்டுள்ளேன். பல ஊர்களுக்கும் சென்று கண்காட்சியை நடத்தவும் ஆசைப்படுகிறேன்'' என்று மிகுந்த ஆர்வத்துடன் தெரிவிக்கின்றார். நளீம் லதீப் எனும் இந்த இளம் கலைஞர்.



## விஜய் மாணவர் கழகம்



அங்.இல: 3969

எஃப்.ருகையா,
தரம் - 1,
சென்.ஜோசப் த.ம.வித்.,
மஸ்கெலியா.



அங்.இல: 3970

பா.கேவீசன்,
பாலர் பிரிவு,
ஆரம்பப்பள்ளி இந்து இளைஞர் கழகம்,
வவுனியா.



அங்.இல: 3971

மா.சுபதா,
தரம் - 6,
கலைமகள் வித்.,
திருகோணமலை.



அங்.இல: 3972

எஸ்.சத்யன்,
தரம் - 5,
றோயல் கல்.,
கொழும்பு-07.



அங்.இல: 3973

க.தேனுஷன்,
தரம் - 7A,
சாவகச்சேரி இந்துக் கல்.,
சாவகச்சேரி.



அங்.இல: 3974

எம்.ஸாஹிர்,
தரம் - 8B,
ம.மி.மத்திய கல்,
குருணாகல்.



அங்.இல: 3975

கௌ.ஹரிதர்ஷன்,
தரம் - 8B,
ரணபிம றோயல் கல்.,
கண்டி.



அங்.இல: 3976

ந.கீர்த்தனா,
தரம் - 11,
இந்துக் கல்.,
கிளிநொச்சி.



அங்.இல: 3977

எஃப்.நுஹா றாஸிக்,
தரம் - 11,
நேகம மு.ம.வித்.,
அநுராதபுரம்.



அங்.இல: 3978

வி.சரத்குமார்,
உயர் தரம்,
என்.எம்.எம்.வி.,
யாழ்ப்பாணம்.



அங்.இல: 3979

ஏ.சலாகுதீன்,
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்,
மட்டக்களப்பு.



அங்.இல: 3980

எம்.ஃபர்சாத்,
உயர் தரம்,
வெ.அ.கு.மு.வித்.,
புத்தளம்.

## சாதனையாளர்

# ஜோன் டோல்டனின் அணுவியல் ஆய்வு

அணுவியல் கொள்கையின் தந்தை எனப் புகழப்படுபவர்தான் ஜோன் டோல்டன். இவர் இங்கிலாந்திலுள்ள ஈகிள்ஸ் பீல்ட் என்ற சிறிய கிராமத்தில் 1766 ஆம் ஆண்டு பிறந்தார். இவர் அணுவியல் ஆய்வினை தமது உயிர் மூச்சாக மேற்கொண்டிருந்தார்.

டோல்டன் பன்னிரண்டு வயது வரையே கல்வி கற்றார். அதன்பின் தமது சொந்த வீட்டிலேயே ஒரு பாடசாலையை ஆரம்பித் தார். தமது பாடசாலையில் படித்த மாணவர்களுக்கு இலவசமாக எழுதுவதற்கு அப்பி யாசக் கொப்பிகள், எழுதுகோல், மை என அனைத்தையும் கொடுத்து உதவி னார். பின்னர் தனது சகோதரருடன் சேர்ந்து கெண்டல் எனும் நகரில் பெரியதொரு கல்விக் கூடத்தை அமைத் தார். அறிவியல் சொற்பொழிவுகளை அக்கல்விக்கூடத்தில் தொடர்ந்து நடத்தினார். கிராமங்களில் அலைந்து திரிந்து பூக்கள், இலைகள், வண்ணத்துப் பூச்சிகள் என்பனவற்றை சேகரித்தார்.



பின்னர் மன்செஸ்டர் நகரில் கிறிஸ்தவ மதம் சம்பந்தமான கல்லூரியில் இணைந்து சேவைகளைச் செய்தார். அக்காலகட்டத்தில் அவருக்கு சிறிது சிறிதாக நிறம் சம்பந்தமாக பார்வையில் கோளாறுகள் ஏற்படத் தொடங்கியது. நீல நிறத்திற்கும் சிவப்பு நிறத்திற்கும் வேறுபாடுகள் தெரியவில்லை. இதனால், அதைப் பற்றிய தீவிர ஆராய்ச்சிகளில் இறங்கினார். இதனால், அவருடைய புகழ் எங்கும் பரவத் தொடங்கியது. அதன் பின்னர் மான்செஸ்டர் நகர விஞ்ஞானக் கழகத்தின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். இங்கிலாந்தில் உள்ள ரோயல் சொசைட்டிக்கும் பிரான்ஸ் நாட்டிலுள்ள 'அகாடமி'க்கும் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இவரின் ஆய்வு முயற்சிகளில் டோல்டனின் தனிமங்கள் பற்றிய ஆய்வுகள் அறிவியல் துறையில் மிகவும் இன்றியமையாதனவாக அமைந்தன. அத்துடன், அவரது அணுக்கொள்கைகள் அணுவைப்பற்றிய ஆய்வுகளுக்கு அடிப்படையாக விளங்கின. அணுவின் தன்மைகள் பற்றிய அவரது கருத்துக்களில் சில தவறுகள் உள்ளதாக பின்னர் உறுதி செய்யப்பட்டாலும் பிற்காலத்தில் அணு ஆராய்ச்சியில் பல விஞ்ஞானிகள் ஈடுபடக் காரணமாக அமைந்தவை 220 வருடங்களுக்கு முன் தோன்றிய டோல்டனின் அணுக்கொள்கைகளே.

(ஆர்.ஜே)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாத்தளையைச் சேர்ந்த ஜீவா-கவிதா தம்பதியரின் செல்வப் புதல்வன் ஜே.ஷவிந்தன், 06-02-2011 அன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடவுள்ளார். இவரைக் குடும்பத்தினர் அனைவரும் மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்பாளின் இறையாசி பெற்று, நலமுடன் வாழ வாழ்த்துகின்றனர்.



இறக்குவானை, ஹிஜ்ரா மாவத்தையைச் சேர்ந்த முஹம்மத் ஷுக்ரி-பாத்திமா ஷர்பானா தம்பதியரின் செல்வப் புதல்வன் ஹம்தி ஷரஃப், 25.01.2011 அன்று தனது மூன்றாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரைக் குடும்பத்தினர் உட்பட, உறவினர்கள் அனைவரும் பல்கலையும் கற்று பாரினிலே நலமுடன் வாழ வாழ்த்துகின்றனர். (தகவல்-சாச்சி)

விஜய் 'விரா உலா'
த.பெ.எண் 2037
கொழும்பு



மாகாண மட்டத்தில் தரம்-05 மாணவர்களுக்காக நடைபெற்ற விரைவு கணிதச் செய்கைப் போட்டியில் பங்குபற்றி சாதனை படைத்த மட்/ பெரியகல்லாறு மெ.மி.த. பெண்கள் பாடசாலை மாணவர்களான (இடமிருந்து வலமாக) ம.கியூமிகா, ச.ரக்ஷன், க.ரிஷோபன், எ.க.ஷெரோமினி ஆகியோருடன் அதிபர், ஆசிரியர்கள் காணப்படுகின்றனர்.




அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு




எம்.அய்மன், தரம்-04,
தி/அப்துல் மஜீத் வித்., கிண்ணியா-11.



தயாளன் வினோத், தரம்-04,
சென்.ஜோன்ஸ் கல்., யாழ்ப்பாணம்.



எம்.ஆர்.எம்.ஷியாம்,
தரம்-05T, ஸாஹிரா ஆண்கள் கல்.,
கட்டுகஸ்தோட்டை.



ஏ.கௌஷிகா, தரம்-07,
ஸ்ரீ/ராமகிருஷ்ண கல்., கலஹா.



ஏ.ஜி.ஏ.ஸமீஹா,
தரம் 3C, சி/சேர் ரசீக் பரீட் ம.வித்.,
கொழும்பு-15.



நமணிதரன் ஜெரோம், தரம்-09B,
வவுனியா தமிழ் ம.வித்., வவுனியா.



எம்.எஸ்.ஹுஸ்னா, தரம்-08D,
அல்/அஸார் மத். கல்.,
திஹாரி.




எம்.எஸ்.எப்.மின்ஹா, தரம்- 06,
தலுதுவ மு.ம.வித்., அவிசாவளை.

## ஓவியம் வரைவோம் - 35

வழங்குபவர் - ஓவியக் கலைச்சுடர் எஸ்.எல்.எம்.மஹ்ரூப்

**நாம் இந்த வாரம் ஒரு காட்சியைப் பூரணமாக வரைவதற்கு முன்னர் சில பயிற்சிகளை செய்து பழகுவோம். இங்கே தரப்படும் பயிற்சியை அவதானமாக வரைந்து அதில் உங்கள் கற்பனைகளையும் புகுத்தி சிறப்புற வரைந்து பழகுங்கள்.**




**படம்: A**

**கூட்டுமாறுடன் பெண்:**

1. படத்தில் காட்டப்பட்டுள்ள முறையில் மனிதனை வரைவதற்கான அடிப்படை ரேகைகளை வரைந்து கொள்ளுங்கள்.

2. நாம் வரைந்த அடிப்படை ரேகைகளுக்கு சமாந்தர ரேகைகளை வரைந்து உருவங்களைப் பூரணப்படுத்துங்கள். நீங்கள் விரும்பியவாறு வர்ணங்களைப் பாவிக்கலாம்.

**படம்: B**

**படியேறும் இளைஞன்:**

1. அடிப்படை ரேகைகளை வரைந்து கொள்ளுங்கள்.

2. நாம் வரைந்த அடிப்படை ரேகைகளுக்குப் பொருத்தமான சமாந்தர ரேகைகளை வரைந்து படத்தில் காட்டியவாறு பூரணப்படுத்துங்கள்.

**படம்: C**

**அமர்ந்திருக்கும் மாணவன்:**

1. அடிப்படை ரேகைகளைப் படத்தில் காட்டியவாறு வரைந்து கொள்வோம்.

2. அடிப்படை ரேகைகளுக்கு சமாந்தரமான ரேகைகளை வரைந்து படத்தைப் பூரணப்படுத்துங்கள்.

**படம்: D**

**சாய்ந்திருக்கும் இளைஞன்:**

1. அடிப்படை ரேகைகளை வரைவோம்.

2. வரைந்த அடிப்படை ரேகைகளுக்கு சமாந்தரமான ரேகைகளை வரைந்து படத்தைப் பூரணப்படுத்துங்கள்.

3. மேற்கண்ட படங்களின் பின்னணிகளை நீங்கள் விரும்பியவாறு வரைந்து பொருத்தமான நிறங்களைத் தீட்டுங்கள்.



ரெ.வினுஜா,
தரம்-10D, பூண்டுலோயா த.ம.வித்.,
பூண்டுலோயா.



எம்.சாதிர்,
தரம்-09,
கு/அல்.மினா மு.வித்.,
குருநாகல்.





ஹஸ்னா லரீப்,
தரம்-11T,
இ/பாலர் இயேசு கன்னியர் மடம்,
இரத்தினபுரி.




பா.நிலோஜன்,
தரம்-08A,
வ/புதுக்குளம் ம.ம.வித்.,
புதுக்குளம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குமாரின் அலறல்



வேப்பமரத்தடியில் கேட்ட அந்தப்பயங்கரமான சத்தம் அவ்விடத்திற்கு மிக அண்மையிலிருக்கும் மாணிக்கம்பிள்ளையின் வீட்டிற்கும் கேட்டது. அந்தப் பயங்கரச் சத்தத்தைக் கேட்டு மாடியில் படுத்திருந்த திருக்குமார் திடுக்கிட்டுக் கண்விழித்தான். சத்தம் மீண்டும் கேட்டது. தீப்பிழம்புகள் சத்தம் கேட்ட திசையில் தோன்றி மறைவது யன்னல் வெளியூடாக தெளிவாகத் தெரிந்தது. திருக்குமார் அச்சத்தால் அலறினான். அவனது சத்தம் கேட்டு வித்தியாபரன் துள்ளிக் குதித்து எழுந்தான். வேப்பமரத்தடியில் இருந்து கேட்கும் சத்தம் வித்தியாபரனையும் அச்சங் கொள்ளச் செய்தது. இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்தபடியே, உடல் உதறல் எடுக்கத் திகைப்புற்று மௌனமாக நின்றனர். அவர்கள் அவ்வாறு இருக்கையில் அறைக்கதவு தட்டப்படும் சத்தம் கேட்டது. திருக்குமார் நடுங்கியபடியே எழுந்து சென்று கதவைத் திறந்தான். அங்கே மாணிக்கம்பிள்ளை கைத்துப்பாக்கியோடு நின்றுகொண்டிருந்தார். ''எதற்காகக் கத்தினீர்கள்'' என அவர் இருவரையும் பார்த்துக் கேட்டார்.

திருக்குமார் ''மாமா! பயங்கரச் சத்தம் ஒன்று கேட்கிறதே அது என்ன? அதோ தெரிகிறதே வெளிச்சம் அது என்ன? என்று கேட்டான். ''அ...... அதுவா! ம் அது ஒன்றுமில்லை நீங்கள் பயப்படாதீர்கள் யன்னல்களையும், கதவையும் நன்றாகப் பூட்டிவிட்டு நித்திரை கொள்ளுங்கள்'' என்றார் மாணிக்கம்பிள்ளை, அவரின் பதில் திருக்குமாருக்குத் திருப்தி அளிக்கவில்லை. ''மாமா! அந்தச் சத்தம் பற்றியும் அந்த வெளிச்சம் பற்றியும் நீங்கள் கூறவில்லையே ஏன்? ''அது....... அது..... பேயின் அலறல் சத்தம்'' என்றார் மாணிக்கம்பிள்ளை. ''பேயா! இக்கிராமமக்களின் தலைவனான நீங்கள் இப்படிக் கூறுவது தவறு. பேயை நீங்கள் பார்த்தீர்களா? அல்லது இக்கிராமத்தவர்கள்தான் நேரில் பார்த்தார்களா?'' என வினவினான் திருக்குமார். அவன் பேயென்ற ஒன்றை என்றுமே நம்பியதில்லை.

''குமார் நீ சின்னவன் இங்கு நடப்பது உனக்குத் தெரியாது. இங்கு பேய் நடமாடுவதாக அனைவரும் நம்புகிறார்கள். பலர் பலியாகியும் உள்ளனர். கடந்த சில நாட்களுக்கு முன்னர் அயல் கிராமத்திலிருந்து பேயோட்ட வந்த பெரிய மந்திரவாதியையும் அவரின் உதவியாளரையும் பேய் அடித்துக் கொன்றுவிட்டது. கிராமத்து மக்களே தினமும் பயந்து, பயந்து வாழ்கிறார்கள். மாலையானதும் தமது வீடுகளுக்குள் முடங்கி விடுகின்றார்கள். என்ன செய்வது என்று தெரியாமல் அனைவரும் தவிக்கிறார்கள். துணிந்து சென்ற ஒரு இளைஞனும் பேயின் அகோரத் தாக்குதலுக்கு இலக்காகி இறந்து போனான்.

விதியை யாரால் வெல்ல முடியும்? விதியை நொந்தவாறே காலத்தைக் கடத்துகிறார்கள் இக் கிராமத்துமக்கள்'' என மிகக் கவலையோடு கூறினார் மாணிக்கம்பிள்ளை.

''மாமா! கிராமங்களில் மட்டும் தானா பேய் உலாவுகின்றது. பட்டணத்தில் பேய்களை காணவில்லையே? அங்கே எந்நேரத்திலும் அச்சமின்றி மக்கள் நடமாடுகிறார்கள்'' என்றான் திருக்குமார்.

''சரி.... சரி....உன்னோடு பேசிக்கொண்டிருக்க முடியாது. ஆவியோடு பேசுகின்றார்கள்' எனப் பத்திரிகைகளில் வெளிவரும் செய்திகளை நீ படிக்கவில்லையா? மதங்கள் கூட, இறைவனுக்கெதிராக வெளிப்படும் சக்தியைப் பேயென்றும், சாத்தான் என்றும் கூறுகின்றனவே? அதை நீ மறுக்கின்றாயா? அல்லது அவை இல்லை என்று மறுக்கக் கூட முடியுமா? பேய்கள் பற்றிய கதைகளை விடிந்ததும் விபரமாகக் கூறுகிறேன். இப்பொழுது சென்று நித்திரை கொள்ளுங்கள்'' எனக் கூறிய பின் மாடிப்படிகளின் மூலம் கீழிறங்கிச் சென்றார் மாணிக்கம்பிள்ளை.

இவற்றை எல்லாம் கேட்டுக் கொண்டிருந்த வித்தியாபரன் திருக்குமாரைப் பார்த்து ''டேய்! திரு. இங்கு இருக்க எனக்குப் பயமாக இருக்கிறது. விடிந்ததும் நாம் பட்டணத்துக்குப் போய்விடுவோம். என்னால் இங்கிருக்க இயலாது'' என்றான். திருக்குமார் சிரித்தவாறே யன்னல்களையும் கதவினையும் மூடினான். திருக்குமார் கட்டிலில் சாய்ந்தபடியே 'வித்தியாபரா! நீ எதற்கும் அஞ்சாதே! பேய் என்னும் இந்த விடயத்தில் ஏதோ மர்மம் இருக்கிறது. அதனை அறியும் வரை நாம் இங்கிருந்து புறப்படக்கூடாது. அதுவரை இங்கு தங்குவதையே விரும்புகிறேன். அழகிய வேப்பங்கேணிக் கிராமத்துமக்களை நாம் இந்தப் பிரச்சினையிலிருந்து விடுவிக்க வேண்டும். அதற்கு உன் உதவி எனக்குத் தேவை. உன்னால், உதவ முடியுமா? 'என்று கேட்டான்' டேய்! திரு முட்டாள்தனமான காரியங்களில் வீணே இறங்க எண்ணாதே! அது ஆபத்தையே விளைவிக்கும்'' என்று எச்சரித்தான் வித்தியாபரன். (தொடரும்)




அரியாலையூர் சி.சிவதாசன்

# கல்வியின் பயன்



கோகுல் வசதியான குடும்பத்தில் பிறந்தவன். கோகுலைப் போலவே முருகனும் ஏழாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தான்.

முருகன் ஏழையாக இருந்தாலும், படிப்பில் ஆர்வம் மிக உள்ளவன். ஆனால், அவனின் பெற்றோர் படிப்பறிவில்லாதவர்கள் அத்துடன் தனியார் வகுப்புக்குச் சென்று முருகனைப் படிப்பிக்கும் அளவிற்கு பணவசதியும் இல்லாதவர்கள். எனவே முருகன் தனக்குப் புரியாத பாடங்களை கோகுலிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் என்று நினைத்து, ஒருநாள் கோகுலின் வீட்டிற்குச் சென்றான்.

''கோகுல்! எனக்கு சில பாடங்கள் புரியவே மாட்டேங்குது. கொஞ்சம் சொல்லிக் குடுப்பியா?'' என்று கேட்டான் முருகன்.

''போடா.... என் பாடத்தைப் படிக்கவே எனக்கு நேரமில்லை. இதுல உனக்கு வேறு சொல்லித் தர முடியுமா?'' என்றான் கோகுல்.

''வாரத்திற்கு இரண்டு நாட்கள் ஒரு மணி நேரம் சொல்லித் தந்தால் போதும், பின்னர் நான் படித்துக்கொள்வேன்'' என்று கெஞ்சினான் முருகன்.

''என்னால் அரை மணி நேரம் கூட உனக்காக ஒதுக்க முடியாது. வாரத்திற்கு இரண்டு நாள் எப்படிச் சொல்லித்தர முடியும்?'' என்று ஒரேயடியாக கோகுல் மறுக்கவே, வருத்தத்துடன் அங்கிருந்து சென்றான் முருகன்.

கோகுலும், முருகனும் பேசிக் கொண்டிருந்ததை கோகுலின் அம்மா கல்யாணி உள் அறையில் இருந்தபடி கேட்டுக் கொண்டிருந்தார். உடனே அவர் கோகுலிடம் சென்று ''ஏன்டா கோகுல், முருகன் சொன்னதை கேட்டுக்கொண்டு தான் இருந்தேன். அவனுக்குப் புரியாத பாடத்தை சொல்லிக் கொடுத்தால் என்ன?'' என்று கேட்டார்.

''எனக்கு நேரம் இல்லையே அம்மா. என் பாடங்களைப் படிக்கவே நேரம் சரியாக இருக்கிறது. படித்தவற்றை மீண்டும் ஒரு முறை எழுதிப் பார்க்க வேண்டும். அப்போதுதான் படித்தவை மறந்து போகாமல் நினைவில் இருக்கும். அதை விட்டுவிட்டு நான் முருகனுக்கு எப்படி சொல்லிக் கொடுக்க முடியும்?'' என்று கேட்டான் கோகுல்.

''கோகுல், நீ தவறாகப் புரிந்து கொண்டாய். உன் கணித ஆசிரியரையே எடுத்துக் கொள். அவருக்கு கணித வாய்ப்பாடுகள் எல்லாம் நன்றாக நினைவில் இருக்கிறதே.... அது எப்படி என்று யோசித்துப் பார்த்தாயா?'' என்று கேட்டார் அம்மா.

''அவர் அடிக்கடி அந்த வாய்ப்பாடுகளைப் படித்துக் கொண்டிருக்கிறார் அதனால்தான்!'' என்று பதில் சொன்னான் கோகுல்.

''சரியாகச் சொன்னாய். கணித ஆசிரியருக்கு மட்டுமல்ல, ஆசிரியர்கள் அனைவருக்குமே அவரவர் பாடம் எப்போதும் நன்றாகவே நினைவில் இருக்கும். காரணம், அவர்கள் தினமும் மாணவர்களுக்கு அதை கற்றுக் கொடுக்கிறார்கள். நாம் ஒரு முறை கற்றதைப் பிறருக்கு கற்றுக் கொடுக்கும்போது, கற்றதெல்லாம் நம் நினைவில் நன்றாகப் பதிந்துவிடுகின்றது. நீ படித்த பாடத்தை முருகனுக்கு கற்றுக் கொடுப்பதால் அவை உன் மனதில் நன்றாகப் பதிந்து விடும். பின்னர் நீ அவற்றை எழுதிப் பார்க்க வேண்டிய அவசியமே இருக்காது. பரீட்சையில் நிச்சயம் நிறையப் புள்ளிகளைப் பெற முடியும்!'' என்றார் அம்மா.

''சரி அம்மா, ஆனால், முருகனுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்க எனக்கு நேரம் இல்லையே...''

''கோகுல், நீ தினமும் கம்ப்யூட்டரில் வீடியோ கேம்ஸ் விளையாடுகிறாய். பின்னர் கேரம், செஸ் எல்லாம் விளையாடுகிறாய். முருகனுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்தால் விளையாட 'நேரம் கிடைக்காமல் போய்விடுமே என்று பயப்படுகிறாய்? 'ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் போல சிறந்தது வேறெதுவும் இல்லை' என்று பாரதியார் கூட கூறியிருக்கிறார் அல்லவா? ஒருவன் பெற்ற கல்வியின் பயனே, தான் கற்றதைப் பிறருக்கு கற்பித்தல் தான். அதனால் உன் விளையாட்டை குறைத்துவிட்டு முருகனுக்குப் பாடம் சொல்லிக்கொடு. இதனால், அந்தப் பாடங்கள் உன் மனதிலும் நன்றாகப் பதிந்து, உனக்கும் நிச்சயம் பயனளிக்கும்!'' என்று கூறி முடித்தார் அம்மா.

அம்மா சொன்னதைக் கேட்ட கோகுலின் மனம் தெளிவடைந்தது. ''அம்மா , நான் படித்த பாடங்களைப் பிறருக்கும் கூறி கொடுத்தால் எனக்கும் பயன் உண்டு என்பதைப் புரிந்துகொண்டேன். நாளையில் இருந்து நான் படித்தவற்றை முருகனுக்கு சொல்லித் [illegible] கூறினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ආයුබෝවන්
ஆயுபோவன்
வணக்கம்

**இன்றைய பாடத்தில் நாய் பற்றிய ஒரு சிறு கட்டுரையைத் தருகின்றோம்.**

## බල්ලා

බල්ලා ගෙදර ඇති කරන සතෙකි. බල්ලා කෙළෙහිගුණ සලකන සතෙකි. මිනිස්සු බල්ලන් ආදරයෙන් ඇති කරති. බල්ලා බත්, මාලු ආදිය කයි. මස් කෑමට වඩා කැමැතියි.

නොයෙක් වර්ගවල බල්ලෝ සිටිති. සමහර බල්ලන් උසයි. සමහර බල්ලන් මිටියි. බල්ලෝ ගෙවල් ආරක්ෂා කරති. බල්ලෝ දඩයමට ද උපකාර වෙති. සොරුන් හා සොර බඩු අල්ලා ගැනීමට බල්ලන් යොදා ගනිති.

බල්ලෝ අමුත්තන් දුටු විට බුරති. හඳුනන අය දුටු විට වලිගය වනති. කුඩා ළමයි සමග සතුටින් සෙල්ලම් කරති. බල්ලෝ අපේ හොඳ යහළුවෝය. බල්ලන්ට අපි ආදරය දක්වමු.

## பல்லா

பல்லா கெதர எத்திகரன சத்தெக்கி. பல்லா கெலெஹி குண சலக்கன சத்தெக்கி. மினிஸ்ஸு பல்லன் ஆதரயென் எத்தி கரத்தி. பல்லா பத், மாலு ஆதிய கய். மஸ் கேமட்ட வடா கெமத்தி.

நொயெக் வர்கவல பல்லோ சிடித்தி. சமஹர பல்லன் உஸய். சமஹர பல்லன் மிட்டிய். பல்லோ கெவல் ஆரக்ஷா கரத்தி. பல்லோ தடயமட்டத உப்பகார வெத்தி. சொருன் ஹா சொர படு அல்லா கெனீமட்ட பல்லன் யொதா கனித்தி. பல்லோ அமுத்தன் துட்டுவிட்ட புரத்தி. ஹந்துனன அய துட்டு விட்ட வலிகய வனத்தி. குடா லமயின் சமக சத்துட்டின் செல்லம் கரத்தி. பல்லோ அப்பே ஹொந்த யாலுவோய. பல்லன்ட்ட அப்பி ஆதரய தக்வமு.

## நாய்

நாய் ஒரு வீட்டு மிருகம். நாய் நன்றியுள்ள மிருகம். மக்கள் இதை அன்பாக வளர்க்கிறார்கள். இது சோறு, மீன் முதலியவற்றை உண்ணும். இறைச்சியை அதிகம் விரும்பி உண்ணும்.

நாய்களில் பல இனங்கள் உள்ளன. சில நாய்கள் உயரமானவை. சில குள்ளமானவை. இவை வீட்டைக் காக்கும். வேட்டைக்கு உதவும். கள்வரையும் களவுபோன பொருள்களையும் கண்டுபிடிக்க நாய்களைப் பயன்படுத்துவர்.

நாய்கள் பிறரைக் கண்டால் குரைக்கும். பழகியவர்களைக் கண்டால் வாலை ஆட்டும். சிறுவர்களோடு விருப்புடன் விளையாடும். நாய் எங்களது நல்ல நண்பன். இவற்றிடம் நாம் அன்பு காட்டுவோம்.

### பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழிபெயர்க்க.**

1. நாய் ஒரு வீட்டு மிருகம்.
 ..................................................
2. இறைச்சியை அதிகம் விரும்பி உண்ணும்.
 ..................................................
3. நாய் வீட்டைக் காக்கும்.
 ..................................................
4. நாய் எங்களது நண்பன்.
 ..................................................






✱ "**Was**" எனும் இறந்தகால துணை வினைச் சொல் (Past Tense Auxiliary verb) வாக்கியங்களில் கையாளப்படும் முறை பற்றி முன்னைய பாடங்களில் கற்றோம் அல்லவா?

✱ இனி "**Were**" எனும் இறந்தகால துணை வினைச் சொல்லை, (Past Tense Auxiliary verb) வாக்கியங்களில் கையாளும் முறை பற்றி அவதானிப்போம்.

✱ "**Were**" எனும் இறந்தகால துணை வினைச் சொல்லும் ஆங்கில இலக்கண ரீதியாக, முதன்மை துணை வினைச் சொல் (Principal Auxiliary verb) என அழைக்கப்படுகின்றது.

✱ "**Were**" எனும் துணை வினைச் சொல்லை, ஒரு வாக்கியத்தில் தனியொரு வினைச் சொல்லாக (ஏனைய சாதாரண வினைச் சொற்களைப் போன்று) கையாளுகின்ற போது, "**Were**" என்பதற்குத் தனியான ஓர் அர்த்தத்தைப் பெற முடிகின்றது. இதற்குரிய உதாரணங்களை இங்கே அவதானிப்போம்.

(அ) நேற்று நீ வீட்டில் இருந்தாய்.
Yesterday you were at home.
(இறந்தகால வாக்கியம் - Past Tense)

✱ நீ வீட்டில் இருந்தாய்.
You were at home.

✱ நீ இருந்தாய்- (இறந்தகாலம்)
You were - (Past Tense)

**குறிப்பு:** மேற்படி வாக்கியத்தில், 'Were' எனும் துணை வினைச் சொல் மாத்திரம், தனியொரு வினைச் சொல்லாக கையாளப்பட்டுள்ளதால், 'Were' என்பதை சாதாரண வினைச் சொல் (Ordinary verb) போன்றே கருத வேண்டும்.ஏனெனில், 'Were' எனும் துணை வினைச் சொல், இத்தகைய சந்தர்ப்பத்தில் முழு வினைச் சொல்லாக (Full verb) பாவனையாகியுள்ளது.

(ஆ) நேற்று நீங்கள் அனைவரும் வகுப்பில் இருந்தீர்கள்.
Yesterday you all were in the class.
(இறந்தகால வாக்கியம் -Past Tense)

✱ நீங்கள் அனைவரும் வகுப்பில் இருந்தீர்கள்.
You all were in the class.

✱ நீங்கள் அனைவரும் இருந்தீர்கள். (இறந்தகாலம்)
You all were - (Past Tense).

(இ) நேற்று நாங்கள் தோட்டத்தில் இருந்தோம்.
Yesterday we were in the garden.
(இறந்தகால வாக்கியம்-Past Tense)

✱ நாங்கள் தோட்டத்தில் இருந்தோம்.
We were in the garden.

✱ நாங்கள் இருந்தோம். (இறந்தகாலம்)
We were. (Past Tense)

(ஈ) நேற்று அவர்கள் கடையில் இருந்தார்கள்.
Yesterday they were in the shop.
(இறந்தகால வாக்கியம் -Past Tense)

✱ அவர்கள் கடையில் இருந்தனர்.
They were in the shop.

✱ அவர்கள் இருந்தனர். (இறந்தகாலம்)
They were -(Past Tense)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரிந்து கொள்வோம்



✱ முதலாவது ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டி எங்கு எப்போது நடைபெற்றது?

**கிரீஸில் உள்ள ஒலிம்பியாவில் கி.பி.776 இல் நடைபெற்றது.**



✱ NASA என்பதன் விரிவாக்கம் என்ன?

**NASA- National Acronauties Space Administration**

✱ அப்பம் சுடப் (தயாரிக்க) பயன்படுத்தும் சோடாவின் விஞ்ஞானப் பெயர் என்ன?

**சோடியம் ஐதரே குளோரைட்**



✱ ஐரோப்பிய வரலாற்றில் 'விதி மனிதன்' என அழைக்கப்படுபவர் யார்?

**பொனபார்ட் நெப்போலியன்**

✱ உலகில் மிகப் பெரிய துறைமுகம் எது?



**நெதர்லாந்திலுள்ள ரோடர்டாம் ஈரோம் போர்ட்'. இங்கு வருடத்திற்கு 3,15,565 கப்பல்கள் வந்து போகின்றன.**



✱ இயேசு நாதரின் கடைசி விருந்தில் கலந்து கொண்டவர்கள் எத்தனை பேர்?

**இயேசு நாதரையும் சேர்த்து 13 பேர் இருந்தனர்.**



✱ சர்வோதய இயக்கம் இலங்கையில் பல்வேறு துறைகளில் அக்கறை கொண்டு செயலாற்றி வருகின்றது. இதனைத் தலைமை தாங்கி நடாத்துபவர் யார்? அவர் பெற்றுள்ள உலக விருதுகள் எவை?

**ஆரியரத்தின, இவர் இந்தியாவில் 'காந்தி சமாதான விருது' பிலிப்பைன்ஸ் நாட்டு 'இரமன் மக்காசே' விருதுகளைப் பெற்றுள்ளார்.**



✱ உலகின் முதலாவது பிரதமர் (Prime Minister) எனப்படுபவர் யார்?

**ஐக்கிய இராச்சியத்தைச் சேர்ந்த ரோபட் வால்போல் என்பவரே முதல் பிரதமராகக் கருதப்படுகின்றார்.**



✱ எந்த மிருகத்திற்கு தனது கண்ணால் (முன் பின்) இரு பகுதிகளையும் பார்க்க முடியும்?

**கடல் குதிரைக்கு**



✱ ஐக்கிய இராச்சியத்திடமிருந்து இலங்கை சுதந்திரம் பெறும் போது, பிரதம மந்திரியாக இருந்தவர் யார்?

**இனமென்ட அட்லி**

✱ இலங்கை கிரிக்கெட் அணிக்கு எப்போது டெஸ்ட் விளையாடும் அந்தஸ்துக் கிடைத்தது?

**1982 ஆம் ஆண்டில்**



✱ ஜனநாயகத்திற்காகப் போராட்டம் நடத்தி சிறையில் வாடும்போது, 'நோபல்' சமாதானப் பரிசு கிடைக்கப் பெற்ற மியன்மார் நாட்டு ஜனநாயகத் தலைவியின் பெயர் என்ன?

**ஆங்சான் சூகி**



✱ 16 ஆவது சார்க் நாடுகளின் மகாநாடு எங்கு நடைபெற்றது?

**2010-04-28,29 ஆம் திகதிகளில், பூட்டானின் தலைநகர் திம்புவில்**



✱ லுயிஸ் பிரவுண் என்பவர் யார்?அவரின் தற்போதைய வயதென்ன?

**முதல் சோதனைக் குழாய் குழந்தை. இன்று 30 வருடங்களைத் தாண்டியுள்ளார்.**

✱ டென்மார்க்கின் தலைநகர் எது?

**கோபன் ஹேகன்**

**தொகுப்பு: உடுவை பரந்தாமன்**



# சூடானில் வடக்கும் தெற்கும் பிரிகின்றன



**சூடான் நாட்டை இரண்டாகப் பிரிக்க வேண்டுமா? வேண்டாமா? என்பதைத் தீர்மானிப்பதற்கென தென் சூடானில் நடைபெற்ற சர்வஜன வாக்கெடுப்பின் முடிவுகள் இன்னும் சில வாரங்களின் பின்னரே வெளியிடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.**

**இருப்பினும் கிடைக்கப்பெற்றுள்ள தகவல்களின்படி,வடக்கு சூடானிலிருந்து தெற்கு சூடான் பிரிந்து செல்ல வேண்டும் என்றே பெரும்பான்மையான வாக்குகள் அளிக்கப்பட்டிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.**

**வருடக் கணக்கில் நடைபெற்ற உள்நாட்டு யுத்தத்தில் வடக்கு சூடானின் தாக்குதல்களுக்கும், அடக்கு முறைகளுக்கும் இலக்காகியிருந்த தெற்கு சூடானிய மக்கள் வடக்கிடம் இருந்து தமக்கு விடுதலை வேண்டும் என்ற வேட்கையில் இருந்தனர்.**

**2005 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட புரிந்துணர்வின் அடிப்படையிலேயே மேற்படி சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆபிரிக்க கண்டத்தில் நீண்ட காலமாக நிகழ்ந்த யுத்தமாக சூடானின் உள்நாட்டு யுத்தம் கருதப்படுகின்றது. அமெரிக்காவும் மேற்கத்திய நாடுகளும் மேற்கொண்ட முயற்சியை அடுத்தே சர்வஜன வாக்கெடுப்பிற்கான இணக்கம் காணப்பட்டது.**




**அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...**

# அமெரிக்காவில் பனிப்புயலினால் விமான சேவைகள் பாதிப்பு



ஐக்கிய அமெரிக்காவில் வீசிய கடும் பனிப்புயலினால் ஏராளமான மாநிலங்களில் விமானப் போக்குவரத்துக்கள் பாதிப்பிற்குள்ளாகின. இதனால், விமானப் போக்குவரத்துக்களை இடைநிறுத்துவதற்கு விமானப் போக்குவரத்து அதிகாரசபை தீர்மானித்ததையடுத்தே, இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக, ஏராளமான பயணிகள் விமான நிலையங்களிலேயே தங்க நேர்ந்தது.

எனினும் அட்லான்டா ஜோர்ஜியா பகுதியில் அமைந்துள்ள 'ஹார்ஸ்ஃபீல்ட் ஜெக்சன்' என்ற சர்வதேச விமான நிலையம் மாத்திரம் செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன், உள்ளூர் விமான சேவையை நடத்தும் 'டெல்டா' விமான சேவை தனது 300 விமான சேவைகளை நிறுத்தியது. மேலும் 1,400 விமான சேவைகளையும் நிறுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. பனிப்பொழிவின் காரணமாக, ஏராளமான விபத்துக்கள் நடைபெற்றுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# ஜப்பானில் எரிபொருள் ஆய்வில் 'ரொபோ'



**ஜப்பானில் 'ரொபோ' இயந்திரத்தைப் பயன்படுத்தி எரிபொருள் தொடர்பாக கடலுக்கு அடியே ஆய்வுகளை நடத்தவுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.**

**நவீன தொழில்நுட்ப வளர்ச்சியில் ஜப்பான் முழு நிறைவை பெற்றுள்ள போதிலும், எரிபொருள் வளத்தில் அது மிகவும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளது. எனவே, இந்தக் குறையை நிவர்த்திக்கு முகமாகவே, ஜப்பான் இந்த ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவுள்ளது.**

**இதன்படி, ஜப்பானிய கடல் பரப்பில் 2,000 மீற்றர் ஆழத்தைக் கொண்ட பகுதியில் சுயமாக இயங்கக் கூடிய 'ரொபோ' இயந்திரம் எரிபொருள் ஆய்வில் ஈடுபடவுள்ளது. இன்னும் சில தினங்களில் மேற்படி வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.**

## அற்லஸ் கேள்வி - 293

**கேள்வி:** சூடானில் எத்தனையாம் ஆண்டில் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டது?

**சரியான விடை.......................................**

**உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.**

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**அற்லஸ் வழியே
உலகைக் காண்போம், கேள்வி - 293,
விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.**

**போட்டி இல - 291 இன் சரியான விடை: இந்தியா**

**பரிசு பெறுவோர்**

ஆர்.எஃப்.அஃப்ரின்,
29/D, யுனிட்-01, பேராறு, கந்தளாய்.

வாசுகி,
3B, 46 ஆம் ஒழுங்கை,
வெள்ளவத்தை, கொழும்பு-06.

ஏ.எஃப்.ஷஹ்மா,
22/2, ஜெயந்தி மாவத்தை, அநுராதபுரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கால அட்டவணை மாற்றத்தினால் கழக மட்ட வீரர்கள் பாதிப்பு



இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை ஏற்பாடு செய்துள்ள அகில இலங்கை ரீதியிலான கழக மட்ட முதல் தர கிரிக்கெட் போட்டித் தொடர் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி, பெப்ரவரி 18 ஆம் திகதியே இப்போட்டிகள் நடைபெறும். இத்தீர்மானத்தின் காரணமாக, போட்டியாளர்களும் கழகங்களும் பெரும் அசௌகரியங்களுக்கு ஆளாகியிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

முன்னதாக இப்போட்டிகள் பெப்ரவரி 5 ஆம் திகதி ஆரம்பமாகி ஏப்ரல் மாதம் இரண்டாம் வாரத்தில் நிறைவடைவதாக இருந்தது. எனினும், தற்போது, மேற்கொள்ளப்பட்டுள்ள மாற்றங்களின்படி, இப்போட்டித் தொடர் மே மாதம் வரை நடைபெறும் எனத் தெரியவருகின்றது.

பெப்ரவரி 19 ஆம்,திகதி ஆரம்பமாகவுள்ள உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ள இலங்கை அணியின் 30 பேரைக் கொண்ட குழாம் பயிற்சிகளை மேற்கொள்வதற்கு வசதியாகவே இப்போட்டிகள் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

Sri Lanka Cricket

எனினும், கழக மட்ட முதல்தர 'ஏ', 'பி' அணிகளில் 'பி' அணியில் எந்தவொரு வீரரும் உலகக் கிண்ண அணிக்கெனத் தெரிவு செய்யப்பட்டுள்ள வீரர்களில் இடம்பெறாத நிலையில் மேற்படி கழக மட்ட 'பி' அணியின் போட்டிகளும் ஏன் ஒத்தி வைக்கப்பட்டுள்ளன என்ற கேள்வி எழுப்பப்படுகின்றது.

தற்போதைய மாற்றத்தின் காரணமாக, மைதான வசதி இல்லாத சில கழகங்கள் மீண்டும் மைதானங்களைத் தெரிவு செய்வதற்கு சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும், இங்கிலாந்தில் கழக மட்டத்திலான போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ள சில வீரர்களும் இந்தக் கால அட்டவணை மாற்றத்தினால் பாதிப்புகளுக்கு உள்ளாகியுள்ளனர். 100 இற்கும் மேற்பட்ட இலங்கை வீரர்கள் ஏப்ரல் இரண்டாம் வாரத்தில் இங்கிலாந்து நோக்கிச் செல்ல இருந்ததாகவும் தற்போதைய மாற்றங்களினால் இவர்கள் மூலம் இலங்கைக்கு கிடைக்கவுள்ள அந்நியச் செலாவணியும் இழக்கப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது.



# மாணவர்களுக்கான கிரிக்கெட் போட்டி

பாடசாலைகளுக்கிடையே அகில இலங்கை ரீதியில் 19 வயதிற்குக் கீழானோருக்கான 'மஞ்சி' கிண்ணக் கிரிக்கெட் போட்டிகள் ஏப்ரல் மாதம் அளவில் நாடளாவிய ரீதியில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மூன்று பிரிவுகளாக நடத்தப்படவுள்ள இப்போட்டிகளில் முதலாம் பிரிவில் 580 போட்டிகளும், 2 ஆம் பிரிவில் 512 போட்டிகளும், 3 ஆம் பிரிவில் 1,200 போட்டிகளும் நடைபெறும்.

மேலும், முதலாவது சுற்றுப் போட்டியானது லீக் போட்டிகளாக நடைபெறவுள்ளதுடன், காலிறுதிப் போட்டிக்குத் தகுதி பெறும் 16 அணிகளுக்கென 20/20 கிரிக்கெட் சுற்றுப்போட்டிகளும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தலைவர் பதவியைத் துறந்தார் வட்டோரி



நியூஸிலாந்து கிரிக்கெட் அணியின் தலைவர் டேனியல் வட்டோரி டெஸ்ட் கிரிக்கெட் தலைமைப் பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகள் முடிவடைந்த பின்னர் ஒருநாள் அணியின் தலைவர் பதவியிலிருந்தும் விலகவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் நியூஸிலாந்து, பாகிஸ்தான் அணிகளுக்கிடையே நியூஸிலாந்தில் நடைபெற்ற டெஸ்ட் தொடரில் நியூஸிலாந்து தோல்வியடைந்ததைமையே டெஸ்ட் தலைவர் பதவியிலிருந்து வட்டோரி பதவி விலகியமைக்குக் காரணமாகும். இருப்பினும், டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் புதிய தலைவரின்கீழ் தொடர்ந்தும் விளையாடத் தாம் ஆவல் கொண்டிருப்பதாகவும் அவர் குறிப்பிடுகின்றார்.

இருப்பினும், டெஸ்ட் போட்டியிலிருந்து ஓய்வு பெறும் உத்தேசம் தனக்கு இல்லை எனவும் கிரிக்கெட் மீது அதீத பற்றுக் கொண்டுள்ளமையால் நீண்ட காலத்திற்கு டெஸ்டில் கலந்து கொள்ள ஆர்வம் கொண்டிருப்பதாகவும் வட்டோரி மேலும் தெரிவித்துள்ளார்.

# சொயிப் மலிக் ஆழ்ந்த கவலையில்...

உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ள பாகிஸ்தான் அணியில் தாம்



இடம்பெறாதது குறித்து சொயிப் மலிக் தனது கவலையைத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து கருத்துத் தெரிவித்துள்ள அவர், ''உரிய காரணம் எதுவும் இன்றி அணியிலிருந்து நீக்கியமை ஏமாற்றத்தை அளித்துள்ளது. இதுநாள் வரை சிறப்பாகவே நான் விளையாடி வந்துள்ளேன். உலகக் கிண்ணப் போட்டிகளுக்கு என்னைத் தெரிவு செய்திருந்தால் எனது சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியிருப்பேன். எப்படியேனும் தெரிவுக் குழுவினரின் கவனத்தை ஈர்த்து அணியில் மீண்டும் இடம் பிடிப்பேன்'' என்றும் அவர் கூறியுள்ளார்.

## விஜய் சந்தா விபரம்

| கொழும்பில் வசிப்போர் (நேரடியாகப் பெறுவதற்கு) | | கொழும்பிற்கு வெளியே வசிப்போர் (தபாலில் பெறுவதற்கு) | |
|---|---|---|---|
| 6 மாதத்திற்கு | ரூபா 390/= | 6 மாதத்திற்கு | ரூபா 780/= |
| 1 வருடத்திற்கு | ரூபா 780/= | 1 வருடத்திற்கு | ரூபா 1560/= |

கீழ்காணும் கூப்பனை நிரப்புங்கள். (ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது.)

பெயர் - ..............................
..............................
முகவரி - ..............................
..............................
தொ.பேசி - ..............................
பத்திரிகையின் பெயர் - ..............................

விஜய் Subscription
For 6 Months/ 1 Year
(அவசியமற்றதை வெட்டிவிடவும்)
..............................
கையொப்பம்/திகதி

மேற் காணப்படும் விபரத்திற்கேற்ப பணத்தை தபாலகத்தில் காசுக்கட்டளையாகச் செலுத்தி குறித்த காசுக்கட்டளையை மாற்றக்கூடிய தபால் கந்தோர் - Slave Island Post Office என்று குறிப்பிடவும். குறித்த காசுக்கட்டளையையும் இங்கு நிரப்பப்பட்ட கூப்பனையும் ஒன்றாக இணைத்து பதிவுத் தபாலில் எமக்கு அனுப்பி வைக்கவும்.

முகவரி:

**SUBSCRIPTION MANAGER,**
**Wijeya Newspapers Ltd.,**
**8, Hunupitiya Cross Road, Colombo-02**

## 'பாட்டா' வினா - 3 வெற்றி பெற்றவர்கள்...

Bata விஜய் B.first SCHOOL SHOES

- அ.தரணிதரன், சனசமூக நிலைய வீதி, அக்கரைப்பற்று-09.
- ஃபாத்திமா ஜரினா, 21, கல்பொக்க வீதி, வெலிகம, மாத்தறை.
- எஃப்.ருகையா, 86, யஹல தென்ன, கண்டி.
- கு.நேசல்யா, 41A, பழம் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
- வேல்முருகு மதுஷா, 98, பெரியகடை, மன்னார்.
- ஃபவாய் இஹ்மட், 22/1, ஸ்டெவோர்ட் வீதி, கொழும்பு-02.
- எஃப்.நஹ்மா, 10, 8 ஆம் வீதி, மஸ்கெலியா.
- டி.எஃப்.ஹில்மா, 878, பழைய சந்தை வீதி, ஏறாவூர்-03.
- ஜே.எஃப்.அஸ்மியா, 181C, ரைதலாவெல, உக்குவெல, மாத்தளை.
- சுஹாசுக்ரி, 24, 3 ஆம் குறுக்குத் தெரு, புத்தளம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'வெற்றி' அதிர்ஷ்டத்தில் இல்லை; சிந்தனையிலேயே அது தங்கியுள்ளது





## கல்வி



## முகாமைத்துவம் - 40

### கற்றலுக்கான ஆலோசனைகள்

வெற்றி என்பது அனைவரும் விரும்பக்கூடிய ஒன்றாகும். பொதுவான கண்ணோட்டத்தில் ஒரு விடயத்தில் வெற்றி அடைபவர் மற்றைய விடயத்தில் தோல்வி அடைவார். மற்றொரு விடயத்தில் வெற்றி அடைபவர் இன்னொரு விடயத்தில் தோல்வி அடைவார். ஆகவே, வெற்றியும் தோல்வியும் சுழற்சி முறையினைக் கொண்டதாகும்.

எனினும், அதிர்ஷ்டம்தான் வாழ்க்கையின் வெற்றிக்குக் காரணம் என்ற ஒரு வாதமும் உள்ளது. 'அதிர்ஷ்டசாலிகள்' அதிர்ஷ்டம் அவர் பக்கம், 'அதிர்ஷ்டம் எங்களுக்கு இல்லை போன்ற பேச்சுக்கள் அனைத்தும் அதனடிப்படையில் எழுந்தவையாகும். எனினும், அதிர்ஷ்டத்துக்கும் வெற்றிக்கும் எவ்வித தொடர்புகளும் கிடையாது என்பதே மறுக்க முடியாத உண்மையாகும்.

அப்படியானால் வெற்றியின் இரகசியம்தான் என்ன? சிலர் ஏனையவர்களை விட, வெற்றியாளர்களாக மாறுவது எவ்வாறு? என்ற, கேள்விகள் மீண்டும் எழுகின்றன. அதற்கான மிக எளிமையான பதில் நீங்கள் சிந்திக்கும் விதம்' என்பதுதான். உங்களைப் பற்றி உங்கள் தொடர்புகள் பற்றி, உங்கள் உலகம் பற்றிய சிந்தனைகளை நீங்கள் மாற்றிக் கொள்ளும் போது உங்கள் வாழ்க்கை மாற்றமடையும். உங்கள் எண்ணப் பாங்கில், சிந்தனையின் தன்மையில் மாற்றம் ஏற்படும்போது, உங்கள் செயற்பாடு வெற்றியை நோக்கி நகரும்.

ஒருவரது வெற்றியும் தோல்வியும் அவரது சிந்தனையில்தான் தங்கியுள்ளது. வெற்றியை அடிப்படையாகக்கொண்டு சிந்தனை தோன்றியிருப்பின் அது வெற்றிக்கான முதற்படியாகும். மாறாக தோல்வியை அடிப்படையாகக்கொண்டு சிந்தனை தோன்றியிருப்பின் அது தோல்விக்கான முதற்படியாகும்.

நீங்கள் எதனைப் பற்றிச் சிந்திக்கிறீர்கள்? என்பதனை நிமிடத்துக்கு நிமிடம், நாளுக்கு நாள் கையாளும் ஆற்றல் உங்களிடம் உண்டு. உள்ளத்தின் வியத்தகு தன்மை இதுதான். இதில்தான் ஒவ்வொரு மனிதனதும் தனிப்பட்ட சுதந்திரம் தங்கியுள்ளது. 'மனிதன் எவ்வளவுக்கு எவ்வளவு சிந்திக்கின்றானோ அந்தளவிற்கு அவன் சுந்திரமானவன், என்று அமெரிக்காவின் பிரபல எழுத்தாளரான ரல்ப் வோல்டோ·எமர்சன் (1803-1882) குறிப்பிட்டுள்ளார். ஆகவே, சிந்தனையே வெற்றியை நிர்ணயிக்கும்.







சிந்தனையை தோற்றுவித்து செயற்பாட்டை சீராக ஒழுங்கமைத்துக் கொள்பவர்களே வெற்றியாளர்கள் ஆவர். தோல்வி அடைபவர்களை எடுத்துக் கொண்டால் இவர்களது தோல்விக்குக் காரணம் வெட்கம், பயம், உறுதியின்மை, இலட்சியம் இல்லாமை, அலட்சியம் என்பனவாகும். இவர்களது சிந்தனை குறுகியதாகும். உலகின் அனைத்து வெற்றியாளர்களினதும் சாதனையாளர்களினதும் இரகசியம் இந்தச் சிந்தனைதான். கண்டுபிடிப்புக்களுக்கு உந்து சக்தியாக இருந்ததும் இந்தச் சிந்தனைதான். ஆனால், உரிய முறைப்படி சிந்திப்போர் நம்மில் எத்தனை பேர் என்பதுதான் கேள்வி. எனினும் உங்கள் மனதில் ஓர் உளச் செயற்பாடு நிகழ்ந்துகொண்டுதான் இருக்கின்றது. அதனால், நீங்களும், சிந்தனையில் ஈடுபட்டுள்ளதாகத் திருப்தியடையக்கூடும். ஆனால், அநேகமாக, அது உங்களை நீங்களே ஏமாற்றிக் கொள்வதாகவும் இருக்கலாம். எப்போதும் நீங்கள் செய்வதெல்லாம் நினைவு கூருதல் அல்லது ஞாபகப்படுத்தல் என்பதுதான். ஞாபகத்துக்கு கொண்டு வருதல் என்பது சிந்தனைச் செயற்பாட்டின் ஓர் எளிமையான கருமம். இங்கு நிகழ்வது ஒரு பாடல் ஒலிநாடாவை மீண்டும் கேட்பது போன்றதாகும். அதாவது, முன்னைய நிகழ்வொன்றை ஞாபகத்துக்குக் கொண்டு வருவதாகும். இதன் ஒட்டு மொத்தமான பெறுபேறு வழமையான வாழ்க்கைப் போக்கையே மீட்டுவதாகும். அதனாலேயே, அமெரிக்க கைத்தொழில் அதிபர் ஹென்றி போர்ட் (1863-1947) 'சிந்திப்பதே உலகின் மிகவும் சிரமமான காரியம். ஒரு சிலர் மட்டுமே அதில் ஈடுபடுவதற்கான காரணம் அதுவே' என்று குறிப்பிட்டுள்ளார்.



எனவே, நல்ல வகையில் சிந்திப்பதுடன், அதனை சீராக செயற்படுத்தும் தன்மையும் நம்மிடம் இருத்தல் வேண்டும். வெற்றியை அடைந்து விடுவேன் என்ற நம்பிக்கையே வெற்றியைப் பிரகடனப்படுத்தி விடும்.

(தொடரும்)

**எம்.ஏ.எஃப்.சப்ரானா**

# 2010, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்



உடபிட்டிய அல் ஹுஸ்னா ம.வித்தியாலயத்தில் கல்வி கற்கும் எம்.நுஸைப், 160 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், எம்.ராஸித் (ஆசிரியர்) எம்.ஜி.நஸீபா (ஆசிரியை) தம்பதியரின் புதல்வராவார்.



உடபிட்டிய அல் ஹுஸ்னா ம.வித்தியாலயத்தைச் சேர்ந்த எம்.சுமைய்யா, 153 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், எம்.லியாஹுத்தீன், எஸ்.சலிமா தம்பதியரின் புதல்வியாவார்.



உடபிட்டிய அல் ஹுஸ்னா ம.வித்தியாலயத்தைச் சேர்ந்த எஃப்.முஸ்லிமா, 150 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், எம்.முஸம்மில், எம்.மலீஹா தம்பதியரின் புதல்வியாவார்.



உடபிட்டிய அல் ஹுஸ்னா ம. வித்தியாலய மாணவி எம்.சப்னா, 149 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், கலீலுர் ரஹ்மான், ஜே.ராலியா தம்பதியரின் புதல்வியாவார்.



கஹட்டோவிட்ட முஸ்லிம் ம.வித்தியாலய மாணவி பஹ்ஜத் அஸ்மி, 163 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், அஸ்மி-பொஸியா தம்பதியரின் புதல்வியாவார்.



உயன்வத்த நூராணியா மு.ம. வித்தியாலய மாணவி ஏ.ஏ.நுஷா, 155 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், அஸீஸ் - நஜிமா தம்பதியரின் புதல்வியாவார்.



உயன்வத்த நூராணியா மு.ம.வித்தியாலய மாணவன் எம்.ரிப்தி, 148 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், ரமீஸ், ஹினாவா தம்பதியரின் புதல்வராவார்.



உயன்வத்த நூராணியா மு.ம.வித்தியாலய மாணவி எஃப்.பஸ்ரா, 145 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், ஹஸனுன், வாஹிதா தம்பதியரின் புதல்வியாவார்.



உயன்வத்த நூராணியா மு.ம. வித்தியாலய மாணவன் எம்.அஷ்பாக், 145 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், நவ்ஸர், ஸாஹிரா பானு தம்பதியரின் புதல்வராவார்.



உயன்வத்த நூராணியா மு.ம. வித்தியாலய மாணவி பி.எஸ். இஸ்ரா, 145 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், பாபுல் ஹிதா, ஸம்ஸுன்நிஸா தம்பதியரின் புதல்வியாவார்.



உயன்வத்த நூராணியா மு.ம.வித்தியாலய மாணவி எஃப்.ஹன்ஸிலா, 145 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், வியாஸ், பர்ஸானா தம்பதியரின் புதல்வியாவார்.



நாம்புலுவ, பாபுஸ்ஸலாம் ம.வித்தியாலய மாணவி கே.எஃப். நஸ்மா, 147 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



நாம்புலுவ, பாபுஸ்ஸலாம் ம.வித்தியாலய மாணவி எம்.எஸ்.சர்ஃபா பானு, 147 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



களு/அல்-பாஸியத்துல் நஸ்ரியா மு.ம.வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவி எஃப்.இபாதா, 146 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.















ஹெம்மாத்தகம, அல் அஸ்ஹர் ம.வித்தியாலயத்திலிருந்து சித்தியடைந்த மாணவர்கள் முறையே;

எம்.எஸ்.நுஸ்கி (153 புள்ளிகள்),
எம்.இஸட். ரஸ்னி அஹமட் (152 புள்ளிகள்),
எம்.ஏ.அம்னா (151 புள்ளிகள்),
எம்.இஸட்.எச்.எஃப்.ராஸியா (149புள்ளிகள்),
எம்.ஆர்.ஸலாமா (146புள்ளிகள்),
எம்.கே.ஸனிர் அஹமட், (145 புள்ளிகள்),
எம்.ஆர்.எஃப். ஸெய்னப் (145 புள்ளிகள்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜய் வாசகர் மடல்

'நைல் நாகரிக வளர்ச்சி', 'அமெரிக்காவின் ரகசியங்கள் மறைந்துள்ள ஏரியா 51', 'சுவையான சொக்லேற் பற்றிய வியப்பான தகவல்கள்' அனைத்தும் சிறப்பானவையே. 'இராமாயணம்' கதைத்தொடர் என்னை மிகவும் கவர்ந்ததாகவும் காணப்படுகின்றது.

**-எஃப்.இல்மா, அரபா தே.கல்., வெலிகம.**

'ஏரியா 51', 'நைல் நாகரிக வளர்ச்சி', 'வாரம் ஒரு நாடு', 'தெரிந்து கொள்வோம்' போன்றன புதுமையான விடயங்களை சுமந்து வந்தன. 'விஜய்' சஞ்சிகை மென்மேலும் வளர்ச்சி பெற எனது வாழ்த்துக்கள்.

**-எம்.பாரிஜ், கண்டி வீதி, திஹாரிய.**




'வாரம் ஒரு நாடு', 'அதிசய ஆய்வுகூடப் பூங்கா', 'கொள்ளி வாய்ப் பிசாசு' ஆகியன மிகவும் பயன் தரக்கூடிய தகவல்கள். இப் புதுவருடத்தில் உனது சேவைகள் மேலும் தொடர எனது வாழ்த்துக்கள்.

**-அ.அஸ்மா, ஜமாலியா வீதி, திருகோணமலை.**

'நைல் நாகரிக வளர்ச்சி', 'அதிசய ஆய்வுகூடப் பூங்கா' போன்ற ஆக்கங்கள் மிகவும் சிறப்பாக இருந்தன. இந்த அளப்பரிய சேவையை மாணவர்களாகிய எமக்கு வழங்கும் நீ மேலும் முன்னேற வாழ்த்துக்கள்.

**-எஃப்.நஸ்லா, தெனிப்பிட்டிய, வெலிகம.**

'வாரம் ஒரு நாடு', 'கண்களைப் பாதுகாப்போம்', 'நைல் நாகரிக வளர்ச்சி', 'புத்தாண்டில் புதிய முயற்சி', 'சொக்லேற்' போன்ற தகவல்களை விரிவாக அறிந்துகொண்டேன். விஜய்யில் வரும் அனைத்துத் தகவல்களும் வரவேற்கத்தக்கன.

**-எஸ்.நந்தினி, பன்சலை வீதி, கெங்கல்ல.**




3 வயது குழந்தை முதல் முப்பாட்டன் வரை வாரந்தோறும் விரும்பி வாசிப்பது உன்னைத்தான். 'வெப்பத்தை உடல் எவ்வாறு நிலைநிறுத்துகின்றது?', 'சொக்லேற் பற்றிய வியப்பான தகவல்கள்', 'ஏரியா 51', 'அதிசய ஆய்வுக்கூடப் பூங்கா', 'விண்வெளித் தகவல்கள்', 'கணினி ஐயங்கள்', 'இராமாயணம்' போன்ற அம்சங்கள் என் அறிவுக்கு மேலும் விருந்தளித்தன. அதுமட்டுமன்றி, 'வேப்பமரத்தடிப் பேய்' தொடர்கதை விறுவிறுப்பாகவும் திகிலூட்டுவதாகவும் அமைந்துள்ளது. ஒவ்வொரு வாரமும் பாடசாலை மாணவர்களாகிய எம்மை வியப்பூட்டி சிறப்பான படைப்புகளைத் தாங்கி வருகின்றாய்.

**-எஸ்.சம்சாத் பேகம், தரம்-13, பரி.யோவான் த.ம.வித்., இறக்குவானை.**

மாணவர்களிடையே மறைந்திருக்கும் திறமைகளை வெளிக் கொண்டுவர ஊன்றுகோலாய் நீ திகழ்கின்றாய். நீ ஒவ்வொரு வாரமும் எம்மை அறிவுசார் உலகினுள் நுழைய வைக்கிறாய். எமக்கு நன்மை தரும் பல விடயங்களை சுமந்து வந்து அனைவரினதும் அறிவுப்பசியைப் போக்குகின்றாய். நீ தாங்கி வரும் அனைத்து விடயங்களையும் சேகரித்து ஆவலுடன் படித்துக் கொண்டிருப்பேன்.

**எம்.ஜ.எஃப். முஃபினா, ...ாதவன் வீதி, கல்முனை.**

'வேப்பமரத்தடிப் பேய்' எனும் தொடரை நான் மிகவும் விரும்பி வாசிக்கிறேன். 'யோகாசனம் பயில்வோம்', 'வாரம் ஒரு நாடு', 'கல்வி முகாமைத்துவம்', 'இராமாயணம்' போன்ற பல அம்சங்கள் மிகவும் சிறப்பாக உள்ளன. நீ இன்னும் பல போட்டி நிகழ்ச்சிகளையும் பல புதிய தொடர்கதைகளையும் அள்ளித் தந்து பல ஆண்டுகளைக் கடந்து மேலும் வளர என் வாழ்த்துக்கள்.

**-மு.இ.இஸ்னா, தரம்-7, அக்/அல்-ஹம்றா ம.வித்., ஒலுவில்-02.**


தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சிறந்த புள்ளிகளைப் பெற எனக்கு 'விஜய்' பத்திரிகை உதவியது. அதுமட்டுமல்ல; எனது பாடசாலையில் நடாத்தும் பொது அறிவுப் போட்டிகளில் வெற்றி பெறவும் ஓர் ஆசானைப் போல் இருந்து எனக்கு உதவிகள் புரிந்தது.

**-தி.மித்திரன், சில்லாலை மேற்கு, பண்டத்தரிப்பு.**

இந்த இதழில் (02.02.2011) வெளியாகியிருக்கும் ஆக்கங்கள் குறித்து உங்கள் விமர்சனங்களை தபாலட்டையில் மாத்திரம் எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள்.
அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 09.02.2011.

**அனுப்ப வேண்டிய முகவரி:** வாசகர் மடல், 'விஜய்' த.பெ.எண் 2037, கொழும்பு.

## வழி காட்டுங்கள் — 1



## வித்தியாசங்களில் X அடையாளமிடுக — 3





## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 295 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
கே.கிளிங்டன்,
118/32, பெனிகொடமுல்ல, நாவலப்பிட்டி.

**போட்டி: 02**
எம்.சஹீல், 511/1,
இனிகல, கட்டுகஸ்தொட்ட.

**போட்டி: 03**
என்.ஜெயஜனனி,
19, முதலாம் ஒழுங்கை, புத்தளம்.

**போட்டி: 04**
அ.அஸீஸா,
46/2, ஜமாலியா வீதி, திருகோணமலை.

**போட்டி: 05**
ஹுசைன் அஜ்வாத்,
1, கமன்தெனிய வீதி, கிருங்கதெனிய.

**பாராட்டுப் பெறுவோர்:**

* ஏ.எம்.எஃப்.மிஸ்தா, திக்குவல்லை.
* ஏ.என்.எஃப்.தஹீயா, மல்வானை.
* என்.எம்.அஸானா பேகம், பதுளை.
* ஏ.ரஞ்சிதா, நாவலப்பிட்டி.
* எம்.என்.எம்.நுஹாஸ், வரகாபொல.
* நேசராஜ்குமார் வித்யாசாகர், கிளிநொச்சி.
* எம்.ஜெயகலா, பூணாகலை.
* பா.கணேசுபதி, சுழிபுரம்.
* எம்.எஃப்.எஃப்.ஸம்ஹா, நாரங்கொட.
* எம்.எஸ்.[illegible] ... மெதகம.





தயாரிப்பு - நுஸ்பா கௌஸ்
1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2011.02.09ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

**அற்லஸ் அறிவுக்கு விருந்து 298**
**விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு**

## பொருத்தமான சொல்லைக்கொண்டு பழமொழிகளைப் பூர்த்தி செய்க — 4

1. ...................... உடம்பிற்கு சிரசே பிரதானம். (உன்/எண்சாண்)
2. குணம் பெரிதேயன்றிக் ...................... பெரியதன்று. (குளம்/குலம்)

## மொத்தம் எத்தனை? — 2





## ஆங்கிலச் சொல் தருக — 5

1. சூரியன் - ......................
2. மகன் - ......................
3. தங்கம் - ......................
4. வெள்ளி - ......................
5. கை - ......................

## அறிவுக்கு விருந்து 295 விடைகள்


**போட்டி: 01**




**போட்டி: 02**



**போட்டி: 03**




**போட்டி: 04**
1. சார்ள்ஸ் குட் இயர்
2. தேன்சிட்டு
3. சீனர்கள்
4. யானை
5. பிரான்ஸ்

**போட்டி: 05**
1. துப்புரவு 2. பட்டறை 3. வளாகம்
4. கலைநிகழ்ச்சி 5. அலுவலகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேட்டை நாயை எதிர்த்த முயல்

## கட்டபொம்மனின் ஊரில் நிகழ்ந்ததாம்!



அச்சத்தை நீக்கிவிட்டால் கோழைக்குக்கூட வீரம் வந்துவிடும். அந்தவகையில் அப்பாவி முயல் ஒன்று பயங்கர வேட்டை நாயை எதிர்த்ததாம். ஆங்கிலேயரை எதிர்த்து வீரப்போர் புரிந்த மன்னன் மாவீரன் கட்டபொம்மனின் தலைநகரமான பாஞ்சாலங்குறிச்சியில்தான் இது நிகழ்ந்ததாம்.

வெகுகாலத்திற்கு முன் பாஞ்சாலங்குறிச்சி அடர்ந்த காடாக இருந்தது. அங்கே கட்டபொம்மனின் முன்னோர்கள் சிலர் வேட்டையாட சென்றனர். அவர்களுடன் வேட்டை நாயும் சென்றது. அங்கிருந்த புதரில் ஒளிந்திருந்த முயல் ஒன்று அவர்களைப் பார்த்ததும் ஓட்டம் பிடித்தது. இதைப் பார்த்த வேட்டை நாய் அந்த முயலைத் துரத்தத் தொடங்கியது. உயிரைக் காப்பாற்றிக்கொள்ள வேகமாக முயல் ஓடிக்கொண்டிருந்தது. வேட்டை நாயும் அதை விடவில்லை.



இரண்டிற்கும் இடையேயான தொலைவு குறைந்துகொண்டே வந்தது. முயல் ஓடிய வழியில் மண் மேடு ஒன்று குறுக்கே இருந்தது. அந்த மண் மேட்டைப் பார்த்த முயல் திகைத்தது. மண்மேட்டையும் தாண்டிச் செல்ல முடியாது. தப்பித்து ஓட வேறு எந்த வழியும் இல்லை என்பது அதற்குப் புரிந்தது. அதன் நிலையைப் பார்த்தது வேட்டை நாய். முயல் சிக்கிக்கொண்டது. அது தப்பிக்க வழி இல்லை என்பதையும் அறிந்தது. பயங்கரமாகக் குரைத்தபடி முயலின்மீது வேகமாகப் பாய்ந்தது. அப்போதுதான் அந்த அதிசயம் நிகழ்ந்தது. அந்த முயலும் வேட்டை நாயின் மேல் வேகமாகப் பாய்ந்தது. தன் மேல் முயல் பாய்ந்து தாக்கும் என்பதை எதிர்பாராத நாய் அதிர்ச்சியில் திகைத்து நின்றது. இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்ட முயல், நாயைத் தாண்டி வேகமாக ஓடி மறைந்தது. முயலின் வீரத்தைப் பார்த்து வேட்டை நாயின் பின்னால் வந்த கட்டபொம்மனின் முன்னோர்கள் வியப்படைந்தனர். எதற்கும் அஞ்சும் முயலே இங்கே வீரத்துடன் செயற்படுகிறது. இந்த மண் வீரம் மிகுந்த மண்ணாக இருக்க வேண்டும் என்று நினைத்தனர். அங்கேயே கோட்டை அமைத்துக் குடி வந்தனர். அந்த இடம்தான் பாஞ்சாலங்குறிச்சி என்று அழைக்கப்படுகின்றது.

தற்போது, சாதாரண கிராமமாக இருக்கும் இப்பாஞ்சாலங்குறிச்சி சரித்திரப் பிரசித்தி பெற்றது. வீரபாண்டிய கட்டபொம்மன் நினைவாக இங்கு நினைவுக் கோட்டையொன்றும் அமைக்கப்பட்டுள்ளது. கட்டபொம்மன் காலத்து நிகழ்வுகளைச் சித்தரிக்கும் பல ஓவியங்கள் இந்தக் கோட்டைச் சுவர்களில் காணப்படுகின்றன. கட்டபொம்மனின் வழிபாட்டுக் கடவுளான ஸ்ரீதேவி ஜக்கம்மாள் கோவிலும் கோட்டைக்கு அருகில் அமைந்துள்ளது. பிரித்தானிய வீரர்களின் உடல்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ள மயானம் ஒன்றும் இங்கு காணப்படுகின்றது. இதேவேளை, கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட இடமான கயத்தாறு என்னுமிடத்திலும் இன்னொரு நினைவாலயம் அமைந்துள்ளது.



# இசைமூலம் நோய்களைக் குணப்படுத்தலாம்

இசைமூலம் மாரடைப்பு, பக்கவாதம் உட்பட, பல நோய்களைக் குணப்டுத்த முடியுமென

இன்னும் எத்தனையோ நிகழ்வுகளை ஏற்படுத்தியுள்ளதாகவும் புராணங்கள் மூலம் அறிய முடிகிறது. இசை மூலம் நோய்களைக் குணப்படுத்தலாமென்பதை தற்பொழுது

தொழிற்பாடுகள் அவதானிக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. இசை கேட்கும்போது, படிப்படியாக இருதய நோய்கள் குணமாகியதையும் குறிப்பாக, மாரடைப்புக்குப் பின்னர் நோயாளி குணமாக

## இத்தாலிய விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு

இத்தாலிய விஞ்ஞானிகள் ஆய்வுகளின் மூலம் கண்டுபிடித்துள்ளனர். இசையின் மூலம் மலையையே கரைய வைத்ததாகவும் மழை பெய்வித்ததாகவும் கதவைத் திறக்க வைத்ததாகவும்

இத்தாலியிலுள்ள பவியா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் லூசியானோ பெர்னார்டி தலைமையிலான குழு ஆய்வுகள் மூலம் நிரூபித்துள்ளது.

இந்த ஆய்வில் 'துள்ளிசை' மூலம் இரத்த அழுத்தம் அதிகரிப்பதாகவும், 'மெல்லிசை' மூலம் அது குறைவடைவதாகவும் தெரியவந்துள்ளது. விரைவான, மெதுவான இசையை சரியான முறையில் இணைத்து வழங்குவதன்மூலம் நோய்களைக் குணப்படுத்தலாமென்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆய்வில் பங்குபற்றியவர்களுக்கு செவிக்குழல் (Head Phones) வழங்கப்பட்டு வித்தியாசமான இசைகள் இசைக்கப்பட்டதாகவும் இதன்மூலம் அவர்களின் இரத்த அழுத்தம், இரத்த ஓட்டம் மற்றும் உடல்



மெல்லிசை பெரிதும் உதவியதாகவும் இந்த ஆய்வுகளின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டன.

இசையின் தாக்கம் பற்றி பேராசிரியர் லூசியானோ பெர்னார்டி எழுதிய கட்டுரையொன்று அமெரிக்க மார்புச் சங்க வெளியீட்டில் (Journal of the American Heart Association) வெளியிடப்பட்டுள்ளது. இதேவேளை, கர்நாடக இசையில் குறிப்பிட்ட சில இராகங்களையும் அது தொடர்பான இசைக்கோர்வைகளையும் கேட்பதன் மூலமும் நோய்களைக் குணப்படுத்தலாமென்றும் தமிழ் நாட்டில் நடைபெற்ற ஆய்வுகள் மூலமும் தெரியவந்துள்ளது.

# யோகாசனம் பயில்வோம்



## சிரசாசனம்

சிரசாசனத்தைப் பயிற்சி செய்யும்முன் முதலில் 'அர்த்த சிரசாசனம்' செய்யும் முறை பற்றி விளக்கியுள்ளேன். அதனைக் குறைந்தபட்சம் மூன்று வாரங்களாவது பயிற்சி செய்து வந்தால் அரைச் சிரசாசன நிலை தானாக வரும். வந்தபின் கால்களைத் தூக்கலாம். இந்த முழுமையான சிரசாசன நிலை பயிற்சிக்கு வந்தபின் ஆடாமல் அசையாமல் கண்களைத் திறக்காமல் சுவாசித்தபடி தேவையான அளவு நேரம் நின்று மெதுவாக கீழே கால்களை இறக்கவும்.

**பயன்கள்:**

புவியீர்ப்பின் காரணமாக, தலைக்கு நல்ல இரத்தம் கொண்டு வரப்படும். இதன்மூலம் மூளைக்கு நல்ல புத்துணர்வு கிடைக்கிறது. கண் பார்வைக்குறை, தலைவலி என்பனவும் மூளை சம்பந்தமான பல கோளாறுகளும், சிரங்கு, கால்களில் ஏற்படும் காயங்கள் என்பனவும் நீங்கும். மாணவர்களுக்கு ஞாபகசக்தியை அதிகப்படுத்தும். ஜடராக்கினியை மாற்றி எரிக்கச் செய்வதால் வயிற்றில் உள்ள மந்தம் எரிக்கப்படுகிறது.

கிரேண்ட் மாஸ்டர்
ஆறுமுகம் ராஜா

# பழைமைமிகு தூய மலர் தாமரை

பல்வேறு நாட்டுக் கலாசாரங்களில் தூய்மையின் அடையாளமாகத் தாமரை மலர் திகழ்கின்றது. காரணம் இது தன்னைத்தானே தூய்மைப்படுத்திக் கொள்ளும் தனிச் சிறப்பான தன்மையைப் பெற்றிருப்பதுதான். தாமரை இலையானது அதன் மேற்பரப்பில் எந்த அழுக்கையும் தங்க விடுவதில்லை.

தாமரை இலையில் இயற்கையாகக் காணப்படும் கெட்டியான மெழுகுப் பூச்சு, பக்றீரியா போன்றவற்றை அதில் ஒட்டிக்கொள்ள முடியாமல் செய்கின்றது. மழை பெய்யும்போது, இலையின்மீது பட்டும் படாமலும் இருக்கும் தூசுகளும் தீய நுண்ணுயிரிகளும்கூட நீரால் அடித்துச் செல்லப்பட, தாமரை மேலும் சுத்தமாக்கப்படுகிறது.

வரலாற்றுப் பதிவுகளும் கற்படிவங்களும் தாமரை ஒரு பழைமையான மலர் என்று பறைசாற்றுகின்றன. போதுமான நீரும் சூரியஒளியும் இருக்கும்போதுதான் தாமரை மலர்கின்றது. பல ஆண்டுகளுக்கு இதன் விதைகள் முளை





அரும்பும் திறனுடன் இருக்கும்.

ஆசியாக் கண்டத்திலேயே பெருமளவில் தாமரை வளர்க்கப்படுகிறது. தாமரையின் அனைத்துப் பாகங்களும் உண்ணக்கூடியவை. தாமரையின் வேர்களும் தண்டுகளும் சமைத்தோ, ஊறுகாய் இட்டோ உண்ணப்படுகின்றன. அனேகமாக, தாமரை மலர், அலங்காரத்துக்கும் அதன் இலைகள் உணவைப் பொட்டலம் கட்டவும் பயன்படுத்தப் படுகின்றன. தாமரை விதைகள் உலர்த்தப்பட்டோ, பொரிக்கப்பட்டோ உண்ணப்படுகின்றன. 'மூன் கேக்' போன்ற சீன இனிப்பு வகைகளில் தாமரை விதைப்பசை அதிகமாகப் பயன்படுத்தப்படுகிறது. அத்துடன், தாமரையின் வேரும் விதைகளும் ஊட்டச்சத்து மிகுந்தவையாகவும் காணப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தொலைக்காட்சியிலும் இணைய சேவை

தொலைக்காட்சியையும் கணினியாகப் பாவித்து இணையத்தளத்தில் உலா வரக்கூடிய கண்டுபிடிப் பொன்று அறிமுகமாகியுள்ளது.

உலகப் புகழ் 'சோனி' (Sony) நிறுவனமே இந்த அறிமுகத்தை செய்துள்ளது. அதாவது, தொலைக்காட்சியை இணையத்தளப் பிரவுஸராக மாற்றம் செய்யக்கூடிய (Television to internet Converter) கருவியொன்றை இவ்வாறு அறிமுகப்படுத்தியுள்ள 'சோனி' நிறுவனம் அதன் 'சர்வதேச நுகர்வோர் தொழில்நுட்ப உபகரணக் கண்காட்சியின் 2011' நிகழ்வின்போது மக்களின் பார்வைக்கு இதனை வைத்தது.

இனிவரும் காலங்களில் சந்தைக்கு வரவுள்ள புதிய தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கு பயன்படுத்தக்கூடியதாக இந்தக் கருவி அமைக்கப்பட்டுள்ளபோதிலும் தற்போது பாவனையிலுள்ள தொலைக்காட்சிகளிலும் இதனைப் பயன்படுத்த முடியும் என்பதே இதன் சிறப்பாகும். அதாவது, உங்கள் தொலைக்காட்சியில் HDMI Port இருக்க வேண்டியது இதற்கு அவசியமாகும். இதன்வாயிலாக,

## புதிய கருவி அறிமுகம்

உயர் தொடர்புள்ள அல்லது உயர் தொடர்பற்ற இணையத்தளத் தொடர்பின் மூலம் தொலைக்காட்சிப் பெட்டியை 'வெப் பிரவுஸராக' மாற்றித் தொழிற்படுத்த முடியும்.

இவ்வாறு தொடர்புபடும் போது, தொலைக்காட்சித் திரையில் 'வேர்ட்சுவல்' 'கீபோர்ட்' ஒன்று தோன்றும்.




அப்போது, குறித்த புதிய கண்டுபிடிப்பான உதிரிபாகத்துடனான தொலை இயக்கியை (Remote control) பாவித்து இணையத்தளத்துள் பிரவேசிக்க முடியும்.

இச் சந்தர்ப்பத்தில் தொலைக் காட்சித் திரையில் நேரம், காலநிலை, திகதி மற்றும் பிரபல செய்தித்தளங்களான You Tube, Google maps ஆகியவற்றின் ஹைக்கன்களும் தோன்றுவதைக் காணலாம்.

# சிறுவர்களுக்கான 'டெப்லட்' கணினி



கணினி உலகில் மிகவும் பேசப்படுகின்ற 'டெப்லட்' கணினியின் இன்னுமொரு விசேட அறிமுகமாக 'Vinci Tab' என்ற கணினியைக் குறிப்பிட முடியும்.

சிறு குழந்தைகளுக்காகவே, உருவாக்கப்பட்டுள்ள 'டெப்லட்' கணினி இதுவென்பதும் குறிப்பிடத்தக்கது.

தொழில்நுட்பப் புரட்சிமிகு உலகில் சிறுவர்களும் பயன்படுத்தக்கூடிய கணினியொன்றை உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்தில் உருவாக்கப்பட்டதே இந்த 'டெப்லட்' கணினி என்று இதன் தயாரிப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

சிறுவர்களின் நலன் கருதி இது அமைக்கப்பட்டுள்ளமையால் இதில் Wifi மற்றும் 3G ஆகிய அம்சங்கள் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. மேலும் குழந்தைகள் இலகுவாக கைகளில் பிடித்துக் கொள்ளக்கூடிய அமைப்பிலேயே இது அமைக்கப்பட்டுள்ளது. காலப்போக்கில் பெற்றோர் தமது குழந்தைகளுக்கு விரும்பி வாங்கிக் கொடுக்கும் ஒரு கணினியாக இந்த 'டெப்லட்' கணினி அமையும் என்பதில் சந்தேகமில்லை.

# புதிய 'வெப்' சேவை

## பழைய நண்பர்களை மீண்டும் சேர்க்கும் சேவை

பேஸ்புக் லூர்கட், மைஸ்பேஸ் போன்ற சோஷல் நெட்வேர்க்ஸ் சேவையைச் சேர்ந்த ஒரு சேவையே இது. ஆயினும் இதன் சிறப்பு என்னவென்றால், நண்பர்களுடன் தொடர்புகொள்வது மட்டுமன்றி, தொடர்புகள் விடுபட்டு நீண்ட காலமாகத் தொடர்பே இல்லாமல் இருக்கின்ற நண்பர்களைக் கண்டுபிடிப்பதற்கும் இந்தச் சேவை உதவிகரமாக உள்ளது.

முகவரி: www.friendsreunited.co.uk







இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2011, பெப்ரவரி மாதம் 02 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday February 02, 2011.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org